394

தமிழ் வாழ்க!

துணர் ௩௫. மலர் ௭.

தமிழ்ப் பொழில்

விகாரி - ஐப்பசி

1959

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. பேராசிரியர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

4. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

5. வித்துவான், க. வெள்ளைவாரணனுர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

7. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் ௩௫ —— மலர் எ

		பக்கம்
1.	திருப்பனந்தாள் திருமடாலயத் தலைவர் திருத்தவத்திரு. அருணந்தித்தம்பிரான் அடிகளார் 60 ஆம் ஆண்டு நிறைவு விழா வாழ்த்து	193
2.	தமிழில் தாவரம்: தேமா—புளிமா. கு. சீநிவாசன், M. Sc.,	195
3.	பழந் தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி சாமி. சிதம்பரனுர்	196
4.	காட்டாளத்தி சங்கீதம் ப. சுந்தரேசன், குடந்தை	205
5.	பத்தினிச் செய்யுளும், கண்ணகியும் மயிலை சீனி. வேங்கடசாமி	211
6.	விக்கிரம சோழ விண்ணகரம் வித்துவான் சி. கோவிந்தராசன்	214
7.	கலைமகள் விழா கரந்தைத் தமிழ்ச் சங்கம்	223

திருப்பனந்தாள் திருமடாலயத் தலைவர்

திருத்தவத்திரு. அருணந்தித் தம்பிரான் அடிகளார்.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰	மலர்
	விகாரி, ஐப்பசி	
௩௫	1959 அக்டோபர், நவம்பர்.	எ

திருப்பனந்தாள் திருமடாலயத் தலைவர்

திருந்தவத்திரு. அருணந்தித் தம்பிரான் அடிகளார்

அறுபதாம் ஆண்டு நிறைவு வாழ்த்து.

முடியுடை வேந்தர் மூவருக்குப் பின்னே செந்தமிழும் சிவ நெறியும் சிறப்புடன் வளர ஆன பணிகள் அனைத்தையும் ஆற்றி வந்த பெருமை திருமடங்களுக்கே யுரியது. அத்திருமடங்களுள் முதலில் வைத்து எண்ணத்தக்க பெருமையுடையது திருப்பனந்தாள் காசித் திருமடமாகும். குன்றின்மேலிட்ட விளக்கெனத் திகழும் இத்திருமடத்தின் முதற்குரவர் குமரகுருபரர். இவர் 17-ம் நூற்றூண்டில் திகழ்ந்த அருளாளருள் முதல்வராவர். இவரியற்றிய நூல்கள் சொல்வளமும், பொருள்வளமும் சிறந்து விளங்குவன. கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், பண்டார மும் மணிக்கோவை போன்றன எத்திறத்தவரும் பயின்று மகிழும் இலக்கிய வளஞ் சான்றவை. இத்தகைய பெருமைக்குரிய குமரகுருபர அடிகள், தமிழ்நாட்டுத் தலங்களை எல்லாம் வழிபட்டுப் பின் காடும் மலையும் கான்யாறும் கடந்து காசிப்பதியை அடைந்தார். அங்கு வழங்கும் இந்துஸ்தானி மொழியைக் கற்றுத் தமிழ் நூற்பொருள் களையும் சிவநெறியுண்மைகளையும் அம்மொழி வாயிலாக வடநாட்டவர்க்கு எடுத்துரைத்தார். அதன் மூலமாக, அந்நாட்டவரது உள்ளத்தையும் ஆளும் மகம்மதிய மன்னனது உள்ளத்தையும் கவர்ந்தார். "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" என்பதை நாடாளும் மகம்மதிய மன்னர்க்கு எடுத்துக்கூறித் தன் விருப்பத்தைத் தெரிவித்து மன்னன் கொடுத்த இடத்திலிருந்து திருக்கோயிலும் திருமடமும் கண்டார்.

இவ்வாறு வடநாட்டில் செந்தமிழையும் சிவநெறியையும் பரப்பிச் செயற்கு அரிய செயல்கள் புரிந்த குமரகுருபரரின் வழிவந்து 6-ம் பட்டத்தில் விளங்கிய தில்லைநாயக சுவாமிகள் தஞ்சை மன்னனின் ஆதரவுபெற்று கி. பி. 1720ல் காசிமடத்தின் கிளையாகத் திருப்பனந்தாளில் திருமடம் கண்டார்கள். காசியில் நடத்தவேண்டிய அறங்கள் திருப்பனந்தாளைச் சூழ்ந்த ஊர்களிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு நடத்த வேண்டினமையால் பனசையில் மடம் அமைந்தது

என்று நினைத்தற்கிடமுண்டு. இன்னும் குமரகுருபரரின் வழிவந்தவர்களில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் 19-ம் பட்டத்து விளங்கிய சாமிநாத சுவாமிகளாவர். என்றுமுள தென்றமிழைப் பலரும் விரும்பிப் பயில ஆர்வங்கொளச் செய்த பெருமை இவர்களையே சாரும். இம்முனிவர் பெருமானுரே வித்துவான் தேர்வில் தமிழில் சிறப்பு முறையில் தேர்ச்சி பெறுபவர்க்கு ஆயிரம் வெண்பொற் காசுகளைப் பரிசிலாக வழங்குதற்குரிய வகையில் பெரும் பொருளை சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு மூலதனமாக வழங்கியுள்ளார். அடுத்தமைத்த பரிசில்கள் பலவாகும்.

இவர்களுக்குப்பின் இருபதாம் நூற்றுண்டில் குமரகுருபரராக விளங்குபவர் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஞானப்பெருந்தலைவர் திருவார்திரு. அருள்நந்தி சுவாமிகள் அவர்கள் ஆவார்கள். தமிழ் மக்கள் செய்த தவப்பயனுகத் தோன்றிய இவர்கள் 26—3—1944ல் இம்மடத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றனர். அன்று தொடங்கி திருக்கேதாரம் முதல் திருக்குமரி வரை "அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றல்—அற்குப ஆங்கே செயல்" என்ற பொதுமறைக்கு ஏற்பப் பல அறக்கட்டளைகளை நிறுவி நிலையான பல அறங்களை வகுத்து வருகிறார்கள். தமக்கு முன்பிருந்த சுவாமிகள் பெயரால் திருப்பனந்தாளில் தமிழ்ப்புலவர் கல்லூரி நிறுவி நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் நுண்மாண் நுழை புலமுமுடைய இவர்கள் திருமுறைப் பாடல்களைப் பண்ணிசையுடன் பாடிச் சிவம் பெருக்கும் சிவ புண்ணிய சீலர். 'அஞ்சுபுலன்வென்று அறுவகைப் பொருள் தெரிந்து ஏழிசைக் கிளவியால் வெஞ்சினம்' ஒழிந்தவர். அரைக்கோடி ரூபாய்க்குமேலாக அறக்கட்டளைகளை அமைத்துள்ளார்கள். அவற்றிலிருந்து வரும் வருமானமெல்லாம் தமிழ், சிவநெறி, பொதுக்கல்வி, அன்னதானம், மருத்துவம் முதலிய பல துறைகளில் செலவு செய்யப்படுகிறது.

'கண்டபெரு மந்திரம் மூவர் பாடல்' ஆதலின், தஞ்சைப் பெருமன்னன் இராசராசனைப் போலவே திருக்கோயில்கள்தோறும் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய ஓதுவார்களை நியமித்துள்ளார்கள். பல தமிழ் நூல்கள் இவர்கள் அருட்கொடையால் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சான்றாக, திருக்குறள் அடக்க விலைக்கு அளிக்கப்பெறுகிறது. இவ்வாறு ஒல்லும் வகையெல்லாம் அறங்கள் பல ஆற்றிவரும் அறக்கொடை அண்ணல் அருள்நந்தி முனிவர் பல்லாண்டு வாழப் பரம்பொருளைச் சங்கம் இறைஞ்சுகின்றது, தமிழுக்கும் தமிழர்க்கும் நன்மைசெய்து வருகிறவர்களைப் போற்றுவதையே கடப்பாடாகக் கொண்ட கரந்தைத் தமிழ்ச் சங்கம் செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் பல்லாற்றானும் பணி புரிந்துவரும் பனசைத் திருமடம் ஞானப் பெருந்தலைவர் அருள்நந்தி முனிவர் அவர்கள் நீடூழி வாழ்கென வாழ்த்துகின்றது. வாய்மைத் தமிழகம் வள்ளன்மைமிக்க அவர்கட்குத் தலைவணங்கி நன்றி செலுத்தும் கடப்பாடுடையது.

பொழிற்றொண்டர்.

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், M. Sc.,

தாவர விரிவுரையாளர், அண்ணுமலைநகர்.

தேமா—புளிமா :

தேமாவும் புளிமாவும் வெவ்வேறு தாவரக் குடும்பங்களைச் சார்ந்த மரங்களாகும். தேமாவை (Mangifera Indica, Lin.) மாங்கிபெரா இண்டிகா என்றும், புளிமாவை (Averrhoa Bilimbi, Lin.) அவர்கோயா பிலிம்பி என்றும் கூறுவர். தேமா (Anacardiaceae) அனகார்டியேசீ என்ற தாவரக் குடும்பத்தையும் புளிமா (Oxalidaceae) ஆக்சாலிடேசீ என்ற குடும்பத்தையும் சார்ந்தவை. தேமாவைத்தான் நாம் மாமரமென்று அழைக்கிரேம். புளிமா மரம் தேமா மரம் போல அத்துணைப் பருத்து வளர்வதில்லை. தேமாங்காய் கிளைகளின் நுனியில் கணுக் குருத்தினின்றும் தோன்றி முதிர்வது. புளிமாங்காய் அடிமரத்திலேயே பலாவின் காய்போலத் தோன்றிக் காய்க்கும். தேமாங்காய் முதிர்ந்தால் பழுக்கும். புளிமாங்காய் பழுப்பதில்லை. தேமா பொதுவாகப் புளிப்புடன் இனிப்புடையது. தேமாவைப்பற்றிப் பழந்தமிழிலக்கியம் பலபடியாகக் கூறுமாயினும் புளிமாவைப் பற்றிய குறிப்புக்கள் காணவில்லை. எனினும் யாப்பிலக்கணத்தில் சீர் என்பது செய்யுள் உறுப்பாகும். அசையால் ஆக்கப்படும் அச்சீர் நான்கு வகைப்படும். அவை ஓரசை, ஈரசை, மூவசை, நான்கசை என்பன. குறிலாவது நெடிலாவது தனித்து வரினும் ஒற்றடுத்து வரினும் அவை நேரசையாகும். குறிலிணை தனித்தும், ஒற்றடுத்தும், குறில் நெடில் தனித்தும், குறில் நெடில் ஒற்றடுத்தும் வருவது நிரையசையாம். இவற்றிற்குரிய வாய்பாடுகள் பின் வருமாறு :—

நேர் நேர் — தேமா
நிரை நேர் — புளிமா.

ஈரசைச் சீராகிய இவை மாச்சீர் எனவும் இயற்சீர் எனவும் அகவற் சீர் எனவும் ஆசிரிய உரிச்சீர் எனவும் பெறும்.

நேர் நேர் நேர் — தேமாங்காய்
நிரை நேர் நேர் — புளிமாங்காய்

மூவசைச் சீராகிய இவை காய்ச்சீர் எனவும், வெண்சீர் எனவும், வெண்பா உரிச்சீர் எனவும் படும்.

நேர் நேர் நிரை — தேமாங்கனி
நிரை நேர் நிரை — புளிமாங்கனி

பழந்தமிழ் நாட்டில் கலை வளர்ச்சி

சாமி. சிதம்பரனர்.

கலை யென்ருல் என்ன ?

கலை யென்பது கற்றுக்கொள்வது. கற்றுக்கொண்டு செய்யும் தொழில்கள் அத்தனைக்கும் கலை என்பது பெயர். பண்டைக்காலத்தினர் தொழில்களை அறுபத்துநான்கு என்று வகுத்தனர். அந்த அறுபத்துநான்கு தொழில்களையும் அறுபத்துநான்கு கலைகள் என்று கூறினர். ஆடைக்கும் கலை என்ற ஒருபெயர் உண்டு. கற்றுக் கொண்டு செய்யும் தொழில் நெசவுத் தொழில்; ஆதலால் அத்தொழிலின் பயனுகிய ஆடையைக் கலை யென்று கூறினர்.

195-ம் பக்கத் தொடர்ச்சி.

மூவசைச் சீரில் இவை கனிச்சீர் எனவும், வஞ்சிச்சீர் எனவும், வஞ்சி யுரிச்சீர் எனவும் படும்.

நேர் நேர் நேர் நேர் — தேமாந்தண்பூ
நிரை நேர் நேர் நேர் — புளிமாந்தண்பூ
நேர் நேர் நிரை நேர் — தேமாநறும்பூ
நிரை நேர் நிரை நேர் — புளிமாநறும்பூ
நேர் நேர் நேர் நிரை — தேமாந்தண்ணிழல்
நிரை நேர் நேர் நிரை — புளிமாந்தண்ணிழல்
நேர் நேர் நிரை நிரை — தேமாநறுநிழல்
நிரை நேர் நிரை நிரை — புளிமாநறுநிழல்.

இவை நான்கசைச் சீர்க்குரிய வாய்பாடுகளாகும். இங்ஙனமாகத் தேமாவும் புளிமாவும் பயிலப்படுகின்றன. இவற்றுள் புளிமாவாகிய அவர்கோயா பிலிம்பி (Averrhoa Bilimbi) இந்தியாவிலும், மலேயா, பர்மா, இந்தோசைன, இலங்கை முதலிய விடங்களிலும் வளர்கின்றது. அவர்கோயா என்ற இவ்வினத்தில் இரண்டு வகைகள் தமிழ்நாட்டில் உள்ளன. புளிமா மரம் சற்றேறக்குறைய இருபது முதல் நாற்பதடி உயரம் வரை ஓங்கி வளரும் இயல்பிற்று. இலைகள் ஐந்து முதல் பதினேழு வரை சிற்றிலைகளை (பல்லலகு) உடையன. காய்கள் நான்கு பட்டைகளை யுடையனவாய் இலுப்பைக் காய் போன்றிருக்கும். காயினுள் ஒருவகை அமில (Acid) மிருத்தலின் புளிப்பாக இருக்கும். இப்புளிமாங்காய்க் கெனவே இம்மரம் பல்வேறிடங்களிலும் பயிரிடப்படுகின்றது.

அறுபத்துநான்கு கலைகள் இவை இவை என்பதைச் சுக்கிரநீதி என்னும் நூலிலே காணலாம். இந்நூல் வடமொழியிலிருந்து பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களால் தமிழில் பெயர்த்தெழுதப்பட்டுள்ளது. இந்நூலில் 4-வது அத்தியாயம், 3-ம் பிரகரணத்தில் அறுபத்துநான்கு கலைகள் என்னும் தலைப்பிலே அவைகளைக் காணலாம்.

சமையல் செய்வது ஒரு கலை. மல்யுத்தம் செய்வதும் ஒரு கலை. நெசவுத் தொழில் ஒரு கலை. ஆபரணங்கள் செய்தல், உலோகங்களுக்கு மேற்பூச்சிடுதல், தோல்களைப் பதனிடுதல் ஆகியவைகளும் தனித் தனிக் கலைகள். வீட்டில் உள்ள பாண்டங்களை அழுக்குப் படியாமல் விளக்கி வைத்துக்கொள்வதுகூட ஒரு கலை. ஆடைகளை வெளுத்தல் ஒரு கலை. மயிர் களைதல் ஒரு கலை. உழவுத் தொழில் ஒரு கலை. குழந்தை வளர்ப்பு ஒரு கலை. நீதிபதியாக இருந்து நீதி வழங்குதல் ஒரு கலை. இவ்வாறு கற்றுக்கொண்டு செய்யுந்தொழில், படித்தறிந்து செய்யுந் தொழில் ஆகிய அனைத்தும் கலை என்னும் தலைப்பில் காணப்படுகின்றன.

ஆகவே படித்தறிந்தோ, படிக்காமல் கண்ணுற்பார்த்து, உள்ளத்தால் உணர்ந்து, கையால் செய்யக் கற்றுக்கொண்டோ, இயற்றப்படும் தொழில்கள் எல்லாம் கலைகள் என்பதைக் காணலாம். நம் காலத்தினர் இவ்வுண்மையை மறந்தனர். நாடகம், சங்கீதம் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களை மட்டும் கலைஞர்கள் என்று கருதுகின்றனர். ஏனைய தொழில் செய்வோரைக் கலைஞர்கள் என்று எண்ணுவதில்லை. இது தொழிலிலே உயர்வு தாழ்வு கருதப்பட்டபின் தோன்றிய எண்ணம்.

பண்டைத் தமிழகத்தில் பல கலைகள் வளர்ந்திருந்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழர்கள், தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் ஆக்கிக்கொள்ள அறிந்திருந்தனர். இன்பமாகக் கேட்டும், பார்த்தும் பொழுது போக்குவதற்கான இசை, நாடகம் முதலிய கலைகளிலும் சிறந்திருந்தனர். இவற்றைச் சங்க நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

கட்டிடக்கலை

ஒரு நாட்டின் சிறந்த நாகரிகத்தைக் காட்டுவது, அந்நாட்டில் அமைந்திருக்கும் கட்டிடங்களாகும். கட்டிடங்களின் அமைப்பும், வேலைப்பாடும் அந்நாட்டு மக்களின் அறிவுக்கும், முயற்சிக்கும் அடையாளம். கட்டிடக் கலையிலே பண்டைத் தமிழர்கள் கைதேர்ந்தவர்கள். அவர்கள் பெரிய பெரிய நகரங்களை அமைத்திருந்தனர். அந்நகரங்களிலே மாடமாளிகை, கூடகோபுரங்களையும் அமைத்திருந்தனர். நகரைச் சுற்றி, மதில், அகழி முதலிய பாதுகாவல்களையும் ஏற்படுத்தியிருந்தனர்.

'முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்'

என்பது தொல்காப்பியப் புறத்திணை இயல் சூத்திரம். "எல்லாப் பாது காப்பும் அமைந்த கோட்டைச் சுவரை முற்றுகை யிடுவதும், கைப் பற்றுவதும்" என்பது இதன் பொருள். இதனால் கோட்டைச் சுவரின்மேல், பகைவர்களை எதிர்க்கக்கூடிய படைகளும், இயந்திரங் களும் அமைக்கப்பட்டிருந்தன என்பதை அறியலாம்.

"மாடம் ஓங்கிய மணல்மலி மறுகின்"

"மாளிகைகள் வானத்தில் உயர்ந்திருக்கின்ற மணல் நிறைந்த வீதி". (பெரும்பாண் ஆற்றுப்படை—322)

"விண் பொர நிவந்த வேயா மாடத்து"

"வானத்துடன் போர் செய்வதுபோல் உயர்ந்திருக்கின்ற கூரையற்ற மேல் வீடுகள்—மாடிக் கட்டிடங்கள்". (ஷை 348)

இவைகளால், பெரிய பெரிய மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன என்பதைக் காணலாம்.

நகரத்தின் கோட்டை வாசல்கள் பெரிதாகக் கட்டப்பட்டிருந்தன. அவ்வாசல்களுக்கு வன்மையான கதவுகள் அமைக்கப்பட்டிருந்தன. யானை முதலியவைகள் அம்பாரியுடன் புகுந்து செல்லும்படியான அகன்ற உயரமான வாசல்களாக இருந்தன. இத்தகைய கோட்டை வாயிலைப்பற்றி நெடுநல்வாடையில் காணப்படுகின்றது.

"தாழொடு குயின்ற போர்சுமை புணர்ப்பின்
கைவல் கம்மியன் முடுக்கலின், புரைதீர்ந்து,
ஐயவி அப்பிய நெய்அணி நெடுநிலை,
வென்றுஎழு கொடியொடு வேழம் சென்றுபுகக்
குன்று குயின்று அன்ன ஓங்குநிலைவாசல்".

[உட்புறம் தாழ்போடும்படி, வேலைத்திறம் மிகுந்த தச்சனால் பொருந்த இணைத்து இடுக்கில்லாமல் நன்றாகச் செய்யப்பட்ட கதவுகள். உயர்ந்த வாசற்கால்; அது வெண்சிறு கடுகும் எண்ணெயும் பூசி வணங்குகின்ற தெய்வ வடிவத்தைக் கொண்டது. வெற்றி பொருந்திய கொடியை உயர்த்திக்கொண்டு யானைகள் செல்லும் வாயில். மலையிலே துளையிட்டுச் செய்ததுபோன்ற பெரிய வாசல்.] (நெடுநல்வாடை—84-88)

"மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்,
விண்உற ஓங்கிய பல்படைப் புரிசைத்,
தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை,

நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழையாடு மலையின் நிவந்த மாடமொடு,
வையை அன்ன வழக்குடை வாயில்''.

[மண் உள்ள அளவும் ஆழமாகத் தோண்டிய அகழி; நீலமணி போன்ற நீர் நிரம்பிய அகழி. வானை முட்டும்படி வளர்ந்துள்ள மதில்; பல கற்படைகள் அமைந்த மதில். பழமையான வலிமை நிலைத்திருக்கின்ற தெய்வ உருவங்கள் அமைந்த உயர்ந்த நிலை. (வாசல் கால்) எண்ணெய் ஊற்றுவதனால் கருமை நிறம் அடைந்திருக்கும் வலிமையுள்ள, இடுக்கில்லாமல் இணைக்கப்பட்ட கதவு. மேகம் அசைந்து கொண்டிருக்கும் மலைபோல் உயர்ந்த மாடம். இவைகள் அமைந்த கோட்டை வாயில். வையை ஆற்றில் இடையருமல் நீரோடிக் கொண்டிருப்பது போல், மக்களும், விலங்குகளும் போய்க்கொண்டிருக்கும் வாயில்.] (மதுரைக் காஞ்சி 351-356.)

மேலே காட்டிய நெடுநல்வாடை அடிகளும், மதுரைக் காஞ்சி அடிகளும் கோட்டை வாயிலின் சிறப்பையும், அமைப்பையும் அறிவிக்கின்றன.

செல்வம் படைத்தவர்கள் வாழும் வேலைப்பாடமைந்த பெரிய வீடுகள் கட்டப்பட்டிருந்தன. அவைகள் நல்ல காற்ருேட்டம் உள்ளவைகள். இத்தகைய வீடுகள் அமைந்த அழகிய தெருக்கள் நகரங்களில் அமைந்திருந்தன.

"வகைபெற எழுந்து, வானம் மூழ்கிச்,
சில்காற்று இசைக்கும் பல்புழை நல்இல்,
யாறு கிடந்து அன்ன அகல்நெடும் தெருவில்''.

[மண்டபம், கூடம், தாய்க்கட்டு, சமையல் கட்டு போன்ற பல வகையான பகுதிகளுடன் உயர்ந்து வானத்திலே மறைந்திருக்கும் கட்டிடங்கள்; அவைகள் தென்றற் காற்று வீசும் பல சாளரங்களை யுடையவை. இத்தகைய கட்டிடங்கள் இருபுறமும் அமைந்த அகன்ற நீண்ட தெருக்கள். பார்த்தால், ஆறு கிடப்பதுபோல் காணப்படும் அத்தெருக்கள்.] (மதுரைக் காஞ்சி 357-359.)

இவ்வடிகள், செல்வம் படைத்தோர் வாழும் சிறந்த வீடுகளின் அமைப்பைக் காட்டின.

இப்பொழுது நாம் கட்டும் வீடுகளில் பல பகுதிகள் அமைக்கின்ருேம். பலரும் கூடி உட்கார்ந்து பேசும் இடம் (பொது ஹால்); படுக்கை அறை; படிப்பறை; அலங்கரித்துக் கொள்ளும் அறை; குளிக்கும் அறை; சமையல் அறை; பார்க்கவருவோர் தங்கும் இடம்; ஆகிய பல பகுதிகளைப் புதிய வீடுகளிலே காண்கின்ருேம். இவை போன்ற பல பகுதிகளுடன் பண்டைக் காலத்திலும் கட்டிடங்கள் கட்டி வந்தனர்.

அரசர்கள் வாழ்வதற்கான பெரிய அரண்மனைகள் எப்படிக் கட்டப்பட்டன; அக்கட்டிடங்கள் எத்தகைய தோற்றமுடன் இருந்தன: என்ற செய்திகளும் சங்க நூல்களில் காணப்படுகின்றன.

இக் காலத்திலே கட்டிடக்கலை வல்லுநர்கள், பெரிய கட்டிடங்களைக் கட்டுவதற்குத் திட்டம் இடுகின்றனர். அதனைப் படமாக எழுதித் தருகின்றனர். அதை வைத்துக்கொண்டு கட்டிடக் கலையில் தேர்ந்தவர்கள் கட்டிடங்கள் கட்டுகின்றனர். இதைப்போலவே பண்டைத் தமிழகத்திலே கட்டிடக் கலையைக் கற்றறிந்து தேர்ந்தவர்கள் இருந்தனர். அவர்கள் பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்களை வகுத்துக் கொடுப்பார்கள். அவர்கள் நிலத்திலே கட்டிடங்களை கட்டுவதற்கு அடையாளம் இட்டுக் கொடுப்பார்கள் இவ்வாறு குறியிடுவதை இக்காலத்தில் 'சதுரித்தல்' என்று கூறுகின்றனர். அவர்கள் மனையைச் சதுரிக்கும்போது திசைகளை வணங்குவார்கள். தெய்வத்திற்குப் பலியும் இடுவார்கள்.

"ஒருதிறம் சாரா அரைநாள் அமயத்து,
நூல்அறி புலவர், நுண்ணிதில் கயிறுஇட்டுத்,
தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கிப்
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்பமனைவகுத்து".

[கதிரவன் ஒரு பக்கத்திலும் சாயாமல் உச்சியிலே நிற்கும் நடுப்பகலிலே மனையைச் சதுரிக்கத் தொடங்குவார்கள். மனையடி சாத்திரம் கற்ற அவர்கள் நன்ருக ஆராய்ந்து கயிறு பிடித்துக் குறியிடுவார்கள். அப்பொழுது திசைகளை வணங்கித் தெய்வத்திற்கும் பலியிட்டு, அரசர்கள் வாழ்வதற்குத் தக்கபடி மனையிலே பல பகுதிகளும் அமையும்படி திட்டம் வகுப்பார்கள்]

(நெடுநல்வாடை 75–78)

இதனுல் எத்தகைய சிறந்த கட்டிடங்கள் கட்டப்பட்டன என்பதை அறியலாம்.

அரசர்களின் உறைவிடங்களுக்கு அரண்மனை என்று பெயர். இதனைப் பண்டைக்காலத்தில் கோயில் என்று வழங்கினர். கோ–அரசன். இல்–இல்லம். தெய்வம் உறையும் கோயில்களைக் கோட்டம் என்று அழைத்தனர்.

அரசன் கோயிலைப் பற்றி, நெடுநல்வாடையில் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

"வரை கண்டன்ன தோன்றல், வரைசேர்பு
வில் கிடந்தன்ன கொடிய, பல்வயின்
வெள்ளி அன்ன விளங்கும் சுதைஉரீஇ,
மணி கண்டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பு இயன்றன்ன செய்வுறு நெடும்சுவர்".

[மலைகளைப்போல உயர்ந்து தோன்றுவன; மலைகளின்மேல் மழைக்காலத்தில் இந்திர வில் ஒளிவிடுவதைப்போல, பல நிறமுள்ள கொடிகள் பறந்துகொண்டிருக்கின்றன. பலவிடங்களிலும் வெள்ளியைப்போல விளங்கும் சுண்ணும்பு பூசப்பட்டிருக்கிறது. நீல மணியைப் போன்ற கருமையும் திரட்சியும் அமைந்த வலிமையுள்ள கருங்கல் தூண்கள் நிறுத்தப்பட்டிருந்தன.]

(நெடுநல்வாடை 108–112.)

இது அரசன் கோயிலின் சிறந்த தோற்றத்தைக் காட்டிற்று.

பண்டைத் தமிழர்களின் கட்டிடக் கலைத் திறமையைக் காண விரும்புவோர், மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களிலே காணலாம்.

உலோகப் பொருள்கள்

பண்டைத் தமிழர்கள் இரும்பு, பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோக வகைகளைக்கொண்டு பல கருவிகளைச் செய்து வந்தனர். பொன் முதலிய உயர்ந்த உலோகங்களால், அழகுக்காக மக்கள் அணியும், அணிகலன்களையும் செய்துவந்தனர்.

"வருதார் தாங்கல் வாள் வாய்த்துக் கவிழ்தல் என்று
இரு வகைப் பட்ட பிள்ளை நிலையும்",

[தன்னை எதிர்த்துவரும் படையைத் தானே நின்று தடுத்தல், வாள்யுத்தம் புரிந்து பகைவரைக் கொன்று தானும் இறத்தல் ஆகிய இரண்டு வகையான அஞ்சாத வீரச்செயல்களும்.]

(தொல்-பொருள்-புறத்திணை சூ–5.)

இச் செயல்களுக்குப் பிள்ளை நிலை என்று பெயர்.

"வாள் மலைந்து எழுந்தோனை, மகிழ்ந்து பறை தூங்க
நாடு அவற்கு அருளிய பிள்ளை யாட்டும்".

[வாளால் போர்செய்து வெற்றிபெற்று உயர்ந்தவனுக்கு மகிழ்ச்சியுடன் பறை முழங்கும்படி நாட்டைப் பரிசளித்து, அவ்வீரனைப் பாராட்டும்.] (தொல்-பொருள்-புறத்திணை சூ–5.)

இதற்குப் பிள்ளை விளையாட்டு என்று பெயர்.

"பட்ட வேந்தனை, அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும்".

[போர்க்களத்திலே இறந்துபட்ட வேந்தனை, அவனைக்கொன்ற வேந்தனுடைய வாட்படை வீரர்கள் சூழ்ந்து நெருங்கி நின்று கூத்தாடும் ஆரவாரமும்.] (தொல்-பொருள்-புறத்திணை–17.)

"பல்படை ஒருவற்கு உடைதலின் மற்று அவன்
ஒள் வாள் வீசிய நூழிலும்".

[வீரன் ஒருவனால், பல படைகளும், புறமிட்டு ஓடும்போது, அவ்வீரன் தனது ஒளிபொருந்திய வாளைவீசி அவைகளைக் கொன்று குவித்தலும்] (ஷை)

மேலே காட்டிய தொல்காப்பியச் சூத்திரங்களால் இரும்பினால் கூர்மையான வாட்படைகள் செய்தனர் என்பதை அறியலாம்.

"கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்"

[ஒரு வீரனிடம் நெருங்கிப்போர்செய்தற்கு அஞ்சிய பலர், எட்டி நின்று, கணைகளையும் வேற்படைகளையும் வீசினர், அவைகள் நெருக்கமாக அவன்மீது மொய்த்தலால்]

(தொல்-பொருள்-புறத்திணை சூ-16.)

"வேல்மிகு வேந்தன்"

[வேலால் போர்செய்து வெற்றிபெறுகின்ற வேந்தன்]

மேலே காட்டிய தொல்காப்பிய அடிகள், அம்புகளும் வேல் என்னும் படைகளும் பண்டைத் தமிழர்களின் போர்க் கருவிகள் என்பதைக்காட்டுகின்றன.

"ஒளிறுவாள் அரும் சமம்"
"வேல்மிகு தானை வேந்தன்"
"எம் அம்பு கடி விடுதும்"

என்பன புறநானூற்றுச் செய்யுள் அடிகள். இவ்வாறு சங்க இலக்கியங்களிலும் வாள், வேல், அம்புகளைக் காணுகின்றோம்.

பொன்னால் சிறந்த அணிகலன்களைச் செய்து வந்தனர் பண்டைத் தமிழர்கள்.

"காதொன்று களைதல்"

[காதில் அணிந்த குழையை நீக்குதல்]

"அணிந்தவை திருத்தல்"

[அணிந்திருக்கும் அணிகலன்களின் அலங்கோலத்தைச் சரிப் படுத்திக் கொள்ளுதல்]

"இழையே"

[வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்ட ஆபரணங்கள்]

மேலே காட்டிய தொல்காப்பியத் தொடர்கள், பலவகையான அணிகலன்கள் செய்யும் கலையைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பதைக் காட்டுவன.

"கூழ்உடை நல்இல் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோல்
பைம்காழ் அல்குல் நுண்துகில் நுடங்க,
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும்
பீலி மஞ்ஞையின் இயலிக், கால
தமனியப் பொன்சிலம்பு ஒலிப்ப, உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்,
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணல் பொன்கழங்கு ஆடும்
பட்டினம்".

என்பது பெரும்பாண் ஆற்றுப்படை அடிகள். (327-336.)

[உணவு மிகுந்த நல்ல இல்லங்களிலே வளைந்த சிறந்த அணிகலன்களைப் பூண்ட மகளிர் வாழ்கின்றனர். அவர்கள் முத்து வடம் பூண்ட தம் இடையிலே, நுண்மையான துகிலை அணிந்திருக்கின்றனர். அத்துகில், கொன்றை மலர்கள் பூத்த மெல்லிய கிளையிலே பனித்துளி தவழ்வதுபோல் அசைகின்றது. பெரிய மலையிலே மகிழ்ச்சி மிகுதியால் சிறைவிரித்து ஆடுகின்ற தோகையையுடைய பெண் மயிலைப்போல் காணப்படுகின்றனர். அவர்களுடைய கால்களிலே பொன்னால் செய்யப்பட்ட சிலம்புகள் ஒலிக்கின்றன. அவர்கள், உயர்ந்த மாளிகையிலே பந்தாடி இளைத்தனர். அதன் முத்துப்போன்ற வெண்மையான மணல் நிறைந்த இடத்திலே, கையிலே புனைந்த சிறிய வளையல்கள் ஒலிக்கும்படி பொன்னால் செய்த கழங்குகளை ஏந்தி ஆடுகின்றனர். இத்தகைய செல்வச் செழிப்புள்ள பட்டினம்.]

இதுவே மேலே காட்டிய அடிகளில் அமைந்திருக்கும் பொருள்.

பண்டைத் தமிழர்கள், மகளிர் அணியும் சிறந்த பொன் அணிகள் பலவற்றைச் செய்தனர்; சிலம்பென்னும் ஆபரணம் செய்தனர்; வளையல்கள் செய்தனர்; விளையாடும் கழங்கு என்னும் கருவிகளைப் பொன்னால் செய்தனர்; என்பதை மேலே காட்டிய பெரும்பாண் ஆற்றுப்படை அடிகள் உணர்த்தின.

"பொலம் தாமரைப் பூச்சூட்டியும்
நலம் சான்ற கலம் சிதறும்
பல் குட்டுவர் வெல்கோலே"

[பொன்னாலாகிய தாமரைப் பூவைச் சூட்டியும், நன்மை நிறைந்த சிறந்த பெரிய அணிகலன்களை அள்ளிக்கொடுக்கும் அரசனே! குட்ட நாட்டினர் பலரையும் வென்ற வேந்தனே.] என்பது மதுரைக் காஞ்சி. (103-105.)

இவ்வடிகள், தாமரை மலர்கள் போல் பொன்னால் செய்யப் பட்டன; பலவகையான பொன்னணிகள் செய்யப்பட்டன; என்ற உண்மையை உணர்த்தின.

"இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்
போக்குஇல் பொலங்கலம் நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர"

[அணிகலன்களை அணிந்த அழகுடைய பெண்கள்—ஆடல், பாடல்களால் இனிய மகிழ்ச்சியைத் தரக்கூடிய பெண்கள்—மதுவை, கெடாத பொன் கலத்திலே ஊற்றிக் கொடுக்கக் கொடுக்க]
(பொருநர் ஆற்றுப்படை 85-87)

"விளங்கு இழை மகளிர் பொலம் கலத் தேந்திய
மணங் கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்து இனிது உறை மதி பெரும"

[பெருமையை உடையவனே! ஒளி வீசுகின்ற அணிகலன்களை அணிந்த மகளிர், பொற்கலத்திலே ஊற்றிக் கையில் ஏந்தி மணம் வீசும் மதுவை ஊட்ட, அதனை அருந்தி நாள்தோறும் மகிழ்ந்து நீண்ட காலம் வாழ்க.] (மதுரைக் காஞ்சி 779-81.)

"தண் கமழ் தேறல்
பொன் செய் புனைகலத் துஏந்தி நாளும்
ஒண் தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து"

[ஒளி பொருந்திய வளையலை அணிந்த பெண்கள், குளிர்ந்து மணம் வீசுகின்ற மதுவை, பொன்னால் செய்த வேலைப்பாடு அமைந்த கலத்திலே ஊற்றி ஏந்தி ஒவ்வொரு நாளும் ஊட்ட, அதனை அருந்தி மகிழ்ச்சி மிகுந்து] (புறம்-56.)

மேலே காட்டிய பத்துப்பாட்டு அடிகளும், புறநானூற்று அடிகளும் பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்களையும், பாத்திரங்களையும் குறித்தன.

மேலே காட்டியவைகளைக்கொண்டு பண்டைத் தமிழர்கள் உலோகங்களைக் கொண்டு படைகள் செய்தனர்; பாத்திரங்கள் செய்தனர்; அணிகலன்கள் செய்தனர்; என்ற உண்மைகளை அறியலாம்.

(அடுத்த இதழில் முடியும்)

காட்டாளத்தி

சங்கீத வித்துவான் ப. சுந்தரேசன், குடந்தை.

இசைத் தமிழில் ஆளத்தி (ஆலாபனம்) முறைமை பல்வேறு வகையினவாய் இருப்பினும் அவையெல்லாவற்றினுள்ளும் சிறப்பாக, அடிப்படைக் கருத்திேைடு முதன்மையாகக் கருதப்படுவன, மூன்ருகும். அம்மூன்றனுள்ளும் தலையாயது காட்டாளத்தி எனப்படும். இது காட்டுகின்ற ஆளத்தி (காட்டு + ஆளத்தி) காட்டாளத்தி எனப்பட்டது. அதாவது, இசைகளைத் தொழில்செய்து ஆளுகின்ற முறைமையைக் காட்டி முதன்முதலாக அமைவுறும் நிலையைக் காட்டுவதால் காட்டாளத்தி எனக் கூறப்பட்டதாகவேண்டும். ஆளத்தியினைக் காட்டுகின்ற இசைமுறைத் தொழில் முறை இப்பெயர் (காட்டாளத்தி) பெற்றதெனவும் கூறலாம்.

அருந்தமிழுரையாசிரியரான அடியார்க்கு நல்லார், இக்காட்டாளத்தி அச்சுடன் நிகழுமெனக் கூறினர். மேலும் அவரே, "அச்சுக்கு எழுவாய் குற்றெழுத்து" எனக் கூறி, பின்,

"குன்ருக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும்
நின்ருர்ந்த மந்நதாந் தவ்வொடு — நன்ருக
நீளத்தா லேழு நிதானத்தால் நின்றியங்க
ஆளத்தி யாமென் றறி"

எனுமொரு நூற்பாவினையும் எடுத்துக்காட்டி "என்பது ஆளத்திக்கு இன்னும் படுவதோரிலக்கணம் உணர்த்துகின்றது. குன்ருக் குறிலைந்தும் கோடா நெடிலைந்தும் என்பது குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் ஆளத்தி செய்யப்படும். குற்றெழுத்து ஐந்தாவன அ–இ–உ–எ–ஒ; நெட்டெழுத்து ஐந்தாவன ஆ–ஈ–ஊ–ஏ–ஓ எனவிவை" என்ற விளக்கவுரையும் தந்து நிறுவினர்.

மேற்காட்டிய நூற்பாவினுல், குன்ருக் குறில் என்பதை இயல்பாகவே தனக்குரிய ஒலி குன்ருத குறிலெழுத்துக்கள் (அ. இ. உ. எ. ஒ.) என்பதாகவும் கோடா நெடில் என்பதை இயல்பாக ஒலிக்கப்பெறும் நெடிலெழுத்துக்கள், தனக்குரிய அளபு முறையில் சிறிதும் கோடாத வகையில் நிலைபேறுகொண்ட முன்னைய குறிலெழுத்துக்களின் நெடிலெழுத்தே (ஆ. ஈ. ஊ. ஏ. ஓ.) என்பதாகவும் நன்குணரக் கிடக்கின்றது. மந்நதாந் தவ்வொடு என்பது மகரத்தின் ஒற்ருல் (ம்) 'த' எனும் எழுத்தினைச் சேர்த்து, தம், தநம் தநாம் தனும் என்றிவ்வாறெல்லாம் மிகவும் நன்ருகத் தொழில் புரியப்படுவது வழக்கென்பதையும் ஒருவாறு உணரக்கிடக்கின்றது.

மீண்டும் மேற்கூறிய நூற்பாவின் சொற்களைச் சிந்திக்குமிடத்து ஆங்கு கூறப்பெற்றுள்ள "நீளத்தால் ஏழு" என்பது 'ஏழு இசைகளின் நிலைகளை' என நன்கறியலாம். இசை நிலைகள் பண்டைய

இசைத் தமிழ் வல்லார் வகுத்துணர்ந்தவாறு மூவகைப்படுவதே முதன்முறையாகும். அவை

க. தார முறை
தாரம் - குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி
உ. குரல் முறை
குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி - தாரம்
ங. இளி முறை
இளி - விளரி - தாரம் - குரல் - துத்தம் - கைக்கிளை - உழை
என அமைவுறும்,

நீளத்தால் ஏழு எனக் கூறினமையினாலே குறளால் ஐந்து என்பதும் உய்த்துணரற்பாலதாகும். ஆகையினாலே அதனையும் முற்றோன்றிய வரன்முறைப்படி எழுதுவாம். நீளத்தால் ஏழு என்பது நீளத்தால் ஏழும் எனக் கூறப்பட்டிருக்கவும் கூடும். அவ்வாறாயினும் ஐந்திற்குக் கொள்வதும் நன்கு வலியுறும். இவ்வைந்தும்,

க. தார முறை - தாரம் - குரல் - துத்தம் - உழை - இளி
உ. குரல் முறை - குரல் - துத்தம் - உழை - இளி - தாரம்
ங. இளி முறை - இளி - தாரம் - குரல் - துத்தம் - உழை

என அமைவுறுவதால், இவற்றிற்கு அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டிக் கூறியாங்கு, எழுத்துக்களை யடைத்துங் காட்டலாம், முதலில் குன்றாக் குறிலைந்தையே எடுத்துக்கொள்வாம். இவ்வெழுத்துக்கள் வரன்முறை மருங்கின் ஐந்து என ஆளத்தி யெழுத்துக்களைச் சுட்டியும் நிற்பனவாம்.

இவை

க. தார முறையில் - தாரம் - குரல் - துத்தம் - உழை - இளி
குன்றாக் குறில் - அ - இ - உ - எ - ஒ

உ. குரல் முறையில் - குரல் - துத்தம் - உழை - இளி - தாரம்
குன்றாக் குறில் - அ - இ - உ - எ - ஒ

ங. இளி முறையில் - இளி - தாரம் - குரல் - துத்தம் - உழை
குன்றாக் குறில் அ - இ - உ - எ - ஒ

என அமைந்து நிற்கும். இம்முறைமையினை, முதலைந்திசை நிரல்கள் ஒவ்வொன்றினுக்கும் காட்டவேண்டி எல்லாவற்றையும் ஒரே அடைப்பினுட் காட்டுவாம். அவ்வவ்விசைக்குரிய குறிலெழுத்தை முதன் முறையாகக் கொள்வதும் அவ்வவற்றிற்குரிய ஆளத்தி முறையின் விரிவாகும்.

ஐந்திசைகளின் அட்டவணை.

தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி	
அ	இ	உ	எ	ஒ	
குரல்முறை	குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்
	இ	உ	எ	ஒ	அ
துத்தம்	உழை	இளி	தாரம்	குரல்	
அ	இ	உ	எ	ஒ	
உழை	இளி	தாரம்	குரல்	துத்தம்	
அ	இ	உ	எ	ஒ	
இளிமுறை	இளி	தாரம்	குரல்	துத்தம்	உழை
	இ	உ	எ	ஒ	அ

மேற்காட்டிய அட்டவணை முதன்முதற் றோன்றிய ஐந்திசைகளுக்கு உரியனவாகும். அவையும் மெலிவு - சமன் - வலிவு எனும் மூவகை நிலைகளுக்கும் உரியனவேயாம். நிற்க. நீளத்தால் ஏழு என்பதனை ஏழிசை நிலைகளுக்குக் கொள்ள ஏழெழுத்துக்கள் தேவைப்படும். அடியார்க்கு நல்லார் காட்டிய நூற்பாவோ கோடா நெடிலைந்தும் எனவே கூறுகிறது. அவரும் ஆ - ஈ - ஊ - ஏ - ஓ - என்றே சுட்டிக் காட்டியுள்ளார். அம்முறை பழைய முறையாயினும் ஏழிசைகளுக்கு ஏழு எழுத்துக்கள் என்பதும் பொருந்துமாகையினாலே அவ்வாறே கொள்ளவேண்டுவதும் இன்றியமையாததாகின்றது.

இக்கருத்து பற்றிய சில குறிப்புகளை அருட்டிரு. விபுலாநந்த அடிகளார் விசு ஆண்டு ஆடித் திங்கள் (1941-ஜுலை) தமிழ்ப் பொழிலில் தந்துள்ளார். அவை வருமாறு :—

"முதலிலே த. ந. ம. என மூன்று மெய்யும் உயிர் பன்னிரண்டும் தமிழிலே ஆளத்தி எழுத்துக்களாக வழங்கப்பட்டன. ஆளத்தியினை இக்காலத்தார் ஆலாபனம் என்பர். 'மகரத்தினொற்றுற் சுருதி விரவும், பகருங் குறிநெடில் பாரித்து - நிகரிலாத் - தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி, மன்னுவிச் சொல்லின் வகை' 'குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்தும், நின்றார்ந்த மங்கரந் தவ்வொடு—நன்றாக—நீளத்தா லேழும் நிதானத்தால் நின்றியங்க ஆளத்தி யாமென் றறி' என ஆளத்தி இலக்கணங் கூறப்பட்டது."

இங்கே சிலப்பதிகாரம் முதற்பதிப்பில் 'மந்நதாந் தவ்வொடு' என்றிருந்தது. பின்னர் 'மந்நகரந் தவ்வொடு' எனத்திரிந்து மற்றைய பதிப்புக்களில் வந்துள்ளதையும் அறியலாம்.

மேலும் விபுலாநந்தரால்,

'ஆ. ஈ. ஊ. ஏ. ஐ. ஓ. ஔ வென் றேழு மேழிசைக் கெய்து மக்கரங்கள்' எனப் பிங்கலந்தையும்,

'ஆ. ஈ. ஊ. ஏ. ஐ. ஓ. ஔ வெனும் இவ்வேழெழுத்தும் ஏழிசைக்குரிய' எனச் சேந்தன் திவாகரமும்,

'ஆங்குளஆ. ஈ. ஊ. ஏ. ஐ. ஓ. ஔ என்னுமேழும் தீங்கிலா அக்கரங்கள் செப்பும் ஏழிசைக்குந்தானே' எனச் சூடாமணி நிகண்டும்,

கூறுதலின் மேற்கோளிலே கோடா நெடிலைந்தும் என்பது கோடா நெடிலேழும் என்றிருக்கவேண்டுமென்பது புலனாகின்றது'

எனவும் கூறப்பட்டுள்ளன.

இக்கருத்தினை நாமும் உளத்திற்கொண்டு அடியார்க்கு நல்லார் காட்டிய மேற்கோட் பாடலை எழுதினால்,

"குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலேழும்
நின்றூர்ந்த மந்நதாந் தவ்வொடு—நன்றாக
நீளத்தா லேழும் நிதானத்தால் நின்றியங்க
ஆளத்தி யாமென் றறி"

எனப்பாட மாறுபாடு எய்தும் தன்மையையுங் காணலாம். அவ்வாறே கோடா நெடில் ஏழு எனக்கொள்ள இப்பொழுது ஏழிசைகளுக்குமுரிய ஆளத்தி யெழுத்துக்கள் தெற்றென விளங்கி விடுகின்றன. இவற்றினையும் அட்டவணையுட் காட்டுவாம். ஏழிசைகளின் ஏழு நிரல் களுக்கும் ஒருங்கே எழுதிக் காட்டுவாம்.

ஏழிசைகளின் அட்டவணை.

தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி
ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ

மேற்காட்டிய ஐந்திசைகளின் அட்டவணையாலும் ஏழிசைகளின் அட்டவணைகளாலும், குறிலைந்தும் நெடிலேழுமான ஆளத்தி யெழுத்துக்கள் பொருந்துந் தன்மையை நன்கு ஓர்ந்துணரலாம்.

இவ்வாறு, ஏழிசைகளின் ஆளத்தியெழுத்துக்களாய உயிர் எழுத்துக்கள், தாரமுறையில்,

தாரம் -	குரல் -	துத்தம் -	கைக்கிளை -	உழை -	இளி -	விளரி
ஆ -	ஈ -	ஊ -	ஏ -	ஐ -	ஓ -	ஔ

என வருவதால், குரல் முறையில்,

குரல் -	துத்தம் -	கைக்கிளை -	உழை -	இளி -	விளரி -	தாரம்
ஈ -	ஊ -	ஏ -	ஐ -	ஓ -	ஔ -	ஆ

என்று வரும். அடுத்த இளி முறையில்

இளி -	விளரி -	தாரம் -	குரல் -	துத்தம் -	கைக்கிளை -	உழை
ஓ -	ஔ -	ஆ -	ஈ -	ஊ -	ஏ -	ஐ

என வந்து மூவகை முறைகளைக்காட்டி நிற்கின்றன.

இவ்வெழுத்துக்கள் யாவும் உயிரெழுத்துக்களானமையினாலே இவற்றோடு த. ந. ம. என்ற மூன்று மெய்யும் உயிர் பன்னிரண்டுடன் ஏறி,

ததா, திதீ, துதூ, தெதே, தை, தொதோ, தௌ, எனவும்
நநா, நிநீ, நுநூ, நெநே, நை, நொநோ, நௌ, எனவும்
மமா, மிமீ, முமூ, மெமே, மை, மொமோ, மௌ, எனவும்

விரவி வரப்பெறும். மேற்கோள் வெண்பாவிலிருக்கும் நின்றோர்ந்த என்ற சொற்களை அடியார்க்கு நல்லாரே தனித்து எடுத்துக்கொண்டு, " நின்றோர்ந்த வென்பது மெய்யெழுத்தாகிய பதினெட்டெழுத்தி னுள்ளும் மவ்வும் நவ்வும் தவ்வுமென மூன்றெழுத்தினமுமல்லா மற்றைய எழுத்துக்கள் ஆளத்திக்கு வரப்பெறா. இம்மூவகை மெய்யினுள்ளும் மவ்விதம் சுத்தத்திற்குரித்து, நவ்வினம் சரளகத் திற் குரித்து, தவ்வினம் தமிழ்க்குரித்து '' எனத் தெளிவுபடுத்தி "இங்ஙனம் மூலாதாரந் தொடங்கி எழுத்தினுதம் ஆளத்தியாய்ப் பின்னிசையென்றும் பண்ணென்றும் பெயராம்'' எனவும் விளக்கி நிறுவினர். விரவவும்பெறும் எனச் சுட்டியுங் கூறினர். [சரளகம் என்பது மற்றைய பதிப்பில் சாளரம் என மாறிவிட்டதுபோலும்.]

இவ்வாறெல்லாம் விளங்கிய இசைத் தமிழின் பெற்றிமையை நம் தமிழ்ச் சான்றோர்கள் கூறியுள்ள குறிப்புக்கள், ஏழிசைகளுக்கும் உரிய ஆளத்தியெழுத்துக்கள் வேறு என்பதையும் குறியீட்டெழுத் துக்கள் வேறு என்பதையும் நன்கு புலனாக்குகின்றன. ஆக இரு வேறு வகையில் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்கள் யாவும் தமிழ் மொழியின் உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும், உயிர்மெய்

3

யெழுத்துக்களுமென்பது இன்னும் தெளிவுறப் புலனுகின்றன. இவற்றில் தவ்வினம் தமிழ்க்குரித்து எனக்காட்டிய குறிப்பு பண்டைய இயல் இசை நாடகமான முத்தமிழின் நீர்மையினை நன்கு வலியுறுத்துவதாகும். தவ்வினம் தமிழுக்கேயுரிய பெற்றிமையறிந்து இறும்பூதெய்தவேண்டும்.

ஏழிசைகளுக்கேயுரிய குறியீட்டெழுத்துக்களும் வருமாறு.

தாரம் - குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி
க - ம - ப - த - நி -ச - ரி
என்பதாம்.

இவற்றில் ஆளத்திமுறை செய்யுங்கால் வரவேண்டுவனவாய எழுத்துக்கள் தவ்வும் நவ்வும் மவ்வுமாமென, பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. இம்மூவெழுத்துக்களை மகரத்தின் ஒற்றேடும் குன்ருக் குறிலேந்தோடும் கோடா நெடிலேழோடும் பொருத்திக் காணலாம். அவை கீழ்க்கண்டவாறு:

ம் - தம் தஅம், ம் நம் நஅம், ம் மம் மஅம்
எனத்தொடங்கி பல்வேறு வகையாக விரிந்து முடிவுறும். அவை யாவும் இங்கெழுதுவதற்கில்லை. அடியார்க்கு நல்லார் விளக்கிய முறைமையில் இக் காட்டாளத்தி, அச்சுடன் நிகழவேண்டுவதால் அச்சுக்கு எழுவாய் குற்றெழுத்து ஆனமையால் காட்டாளத்தி முழுமையும் குறில் முறையிலேயே நன்கு புலப்படும்படி தொழில் செய்து காட்டப்பெறவேண்டும். அத்தொழிலும், ஏதேனும் ஒரு பண்ணை, அதற்குரிய இசையமைதிகளை ஒழுங்காகக்கொண்டு எடுத்து அவ்விசைகளில் இணையிசை, பகையிசை, நட்பிசை, கிளையிசை இவற்ரேடு, மெலிவு, சமன், வலிவு, எனும் மூன்று நிலைகளிலும் எடுத்தல், படுத்தல், நலிதல், அசைத்தல், வளைத்தல், ஒலித்தல், உருட்டல், தாக்கல், என்ற எட்டுவகைச் செய்கைகளாலும், தான் வைத்துக் கொண்டுள்ள அடிமணைச் சுருதியோடு ஒன்றி இன்னிசைபெறக் காட்டப்படவேண்டும். இவ்வாறு தொழில் செய்து காட்டப்படுவது, கேட்போருக்கு இசையினிமையும் வியப்பும் உண்டாகத்தக்கவாறு இருக்கவேண்டுமேயன்றி சற்றேனும் வெறுப்பு உண்டாகும் வகையில் எந்தப் பகுதியும் இருத்தல் கூடாது. அதற்கேற்றவாறு ஒவ்வொரு இசைப் புலவனும் தனது வாழ்நாளில் அறிந்து உணர்ந்து உழைத்து வல்லவனுகத் திகழவேண்டும். இத்தகைய ஆளத்தியின் விரிவினைத் தனி நூலாக எழுதி வருகின்றேன்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

பத்தினிச் செய்யுளும், கண்ணகியும்.

மயிலை, சீனி. வேங்கடசாமி.

இந்த ஆராய்ச்சியில் பிள்ளையவர்களின் அடிச்சுவடுகளைப் பின் பற்றிச்செல்கிற திரு. நீலகண்ட சாஸ்திரி, சிலப்பதிகாரத்துக்கு முன்பு ஒரு வெண்பா நூல் இருந்திருக்கக்கூடும் என்று பிள்ளையவர்கள் கூறியதை யொட்டி தமது ஆங்கிலக் கட்டுரையில் இவ்வாறு எழுதுகிறார் :—

" Another Venba of a narrative character refering to the trouble Kovalan got into at Madurai is cited by Deivac--cilaiyar in his commentary on Tolkappiyam Sol. 100. Hence the superb work of Ilango, like the Ramayana of Valmiki, must be taken to clothe in the best literary form a moving story of wide appeal which found expression in several other works besides, though not of equal merit." (University of Ceylon Review Vol. VII. 1949.)

முதற்கோணல் முற்றும் கோணல் என்பது பழமொழி. வையாபுரியாரும் நீலகண்டரும் அடிப்படையிலேயே தவருன கருத்தை வைத்துக் கொண்டு அதன்மேல் ஆராய்ச்சிக் கட்டடத்தைக் கட்டுகிருர்கள். அடிப்படையே அழிந்து விட்ட பிறகு கட்டடம் எப்படி நிற்கமுடியும்? " இவள் (கண்ணகி) வரலாறு ஒருபடியாக உருப்பெற்ற காலத்து அவலச் சுவை மிகுந்த இப்பகுதியுடன் பின்கதைப் பகுதிகளையும் அமைத்து வெண்பா யாப்பியல் நூல் ஒன்று ஒரு கவிஞன் செய்திருந் தானென்பது கொள்ளலாம். தெய்வச் சிலையர் கூறும் வெண்பா இந் நூலைச் சேர்ந்ததாகலாம் " என்று தங்கள் கருத்தை (யூகத்தைத்) தெரிவிக்கிருர்கள் வையாபுரியாரும் நீலகண்டரும். (சிலப்பதிகாரத் துக்கு முன்னூல் முதலியன இல்லை என்று வையாபுரியார் மற்ருேர் இடத்தில் எழுதியிருப்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.)

இவர்கள் காட்டிய பத்தினிச் செய்யுள், கண்ணகி கோவலரைப் பற்றியது அன்று என்று மேலே அகச்சான்று புறச்சான்றுகள் காட்டி நிறுவப்பட்டது. எனவே, கோவலன் கண்ணகியார் வரலாறு ஒரு பழைய கட்டுக்கதை என்று இவர்கள் நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முயற்சி வீண் முயற்சியாயிற்று. இவர்களுடைய போலிக் காரணங்கள் சரிந்து விழுந்தபிறகு, அதனேடு மற்ற யூகங்களும் சரிந்து விழுந்து விட்டன.

ஒரு புலவன் வெண்பாவினல் ஒரு நூல் இயற்றியிருக்கக்கூடும் என்றும், யாப்பருங்கல உரையாசிரியர் காட்டும் பத்தினிச் செய்யுளும்,

தெய்வச்சிலையார் மேற்கோள் காட்டும் "காதலியைக் கொண்டு" என்னும் வெண்பாவும் அந்நூலைச் சேர்ந்தவையாக இருக்கக் கூடும் என்றும், ஆகவே, கோவலன் கண்ணகியார் கதை ஒரு பழைய கதை என்றும், அப்பழைய கதையை ஆதாரமாகக்கொண்டு இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினர் என்றும் பிள்ளையும் சாஸ்திரியாரும் ஒரு கற்பனையைக் கட்டுகிறார்கள். இவர்கள் இட்டுக் கட்டிக் கூறுவதுபோல ஒரு பழைய வெண்பா நூல் உண்மையில் இருந்திருக்குமானல் அந் நூற் பெயரையும் அந்நூலாசிரியன் பெயரையும் யாப்பருங்கல உரையாசிரியரும், தெய்வச்சிலையாரும், அடியார்க்கு நல்லாரும், அரும்பத உரையாசிரியரும், இளங்கோ அடிகளும் தமது உரைகளிலும் நூல்களிலும் கூறியிருப்பார்கள் அன்றோ? இச்செய்யுள் ஆரிடச் செய்யுள் என்று கூறப்படுவதால், இச்செய்யுளைக்கொண்ட நூலை இயற்றியவர் பேர்போன இருடியாகத் தானே இருக்க வேண்டும்? அப்படிப்பட்ட இருடியின் பெயரும் அவர் இயற்றிய நூலின் பெயரும் சிறப்பாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும் அல்லவா? அவர் பெயரையும் நூலின் பெயரையும் ஏன் உரை யாசிரியர்களும் மற்றவர்களும் கூறவில்லை? அப்படி ஒரு நூலும் ஆசிரியரும் இல்லாதபடியினலே அவர்கள் கூறவில்லை. மேற்கோள் காட்டப்பட்ட இச் செய்யுள்கள் தனிப்பாடல்கள் என்பது விளங்கு கின்றது.

பத்தினிச் செய்யுள் என்பது உண்மையில், சங்க காலத்துக்குப் பிற்காலத்திலே இருந்த யாரோ ஒரு பத்தினிப் பெண் பாடிய ஒரு தனிப்பாடல் என்று தோன்றுகிறது. பத்தினிச் செய்யுளைக் கண்ணகியார் பாடிய செய்யுள் என்று தவருகக் கருதிக்கொண்ட இராகவையங்காரும், இச் செய்யுளைத் தனிச் செய்யுளாகக் கருதினரே தவிர, ஒரு நூலில் இருந்து எடுத்த செய்யுள் என்று கருதவில்லை. எனவே, கண்ணகி கதையைக் கூறுகிற வெண்பா நூலொன்று சிலப்பதிகாரம் இயற்றுவதற்கு முன்பு இருந்ததென்று சாஸ்திரியாரும் பிள்ளையும் யூகிப்பது ஆதாரம் அற்ற கட்டுக்கதை என விடுக.

ஒரே விருத்தப் பாவினல் இராமாயணக் கதை முழுவதையும் அமைத்து "ஏக விருத்த இராமாயணம்" என்னும் ஒரு விருத்தப்பா தனிப்பாடற்றிரட்டில் உண்டு. அதுபோல, சிலப்பதிகாரக் கதையை ஒரு வெண்பாவினல் அமைத்துப் பிற்காலத்தில் இருந்த யாரோ ஒரு புலவர் பாடியதுதான், தெய்வச் சிலையார் மேற்கோள் காட்டிய வெண்பா. ஏகவிருத்த இராமாயணம் ஒரு பழைய இராமாயண நூல் என்றும், அந்நூலைப் பார்த்துத்தான் கம்பன் இராமாயணத்தைப் பாடினன் என்றும் யாரேனும் ஒரு அறிஞர் புனைந்துரைப்பாரானல் எப்படியோ, அப்படித்தான் இருக்கிறது, "காதலியைக் கொண்டு" என்னும் வெண்பாவைப் பார்த்து இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடினர் என்று சாஸ்திரியாரும் பிள்ளையும் கூறுவது. தக்க சான்று காட்டாமல், இப்படியிருக்கலாம், அப்படி இருக்கக்கூடும் என்று யூகங் களையும் யோசனைகளையும் சொல்லுவதுதான் ஆராய்ச்சியோ?

பொறுப்புள்ள இடத்தில் இருந்துகொண்டு வாய் புளித்ததா, மாங்காய் புளித்ததா என்பதுபோல், எதையும் கூறிவிட்டால் அறிஞர் உலகம் ஏற்றுக்கொள்ளுமா ?

மேலும் இவ்விரு அறிஞர்களும் எழுதுகிருர்கள்:- "ஆரிடப்போலி அல்லது ஆரிடவர்க்கம் என்று பத்தினிச் செய்யுள் குறிப்பிடப் படுவதால், இந்நூல் (இவர்கள் யூகமாகக் கற்பித்துக்கொண்ட நூல்) சிலப்பதிகாரத்துக்கு முற்பட்டதாதல் வேண்டும். எனவே, இக் காவியத்துக்கு (சிலப்பதிகாரத்துக்கு) முன்பே கண்ணகி வரலாறு தோன்றி வளர்ந்துள்ளதெனக் கருதுதல் தகும்" என்று வையாபுரி யாரும் நீலகண்டரும் கூறுகிருர்கள். இவர்கள் இவ்வாறு கூறுவதற்கு ஆதாரம் எங்கே? சான்று எங்கே உள்ளது ?

ஆரிடம் என்ருல், இருடிகள் வாக்கு என்பது பொருள். ஆரிடச் செய்யுள்கள் எல்லாம், சிலப்பதிகாரக் காலத்துக்கு முன்புதான் இயற்றப்படும், அதற்குப் பிற்காலத்தில் இயற்றப்படமாட்டா என்று இவர்கள் எங்கே கண்டார்கள்? சிலப்பதிகாரக் காலத்துக்குப் பின்பு ஆரிடச் செய்யுள்கள் இயற்றப்படக் கூடாது என்று எங்கேனும் கட்டளையோ நியதியோ உண்டா? இதற்கு ஆதாரம் காட்ட முடியுமா?

சாஸ்திரியாரும் பிள்ளையும் ஒன்று சேர்ந்துகொண்டு எதை எதையோ காரணங் காட்டி எழுதுகிருர்கள். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கிருர்கள். அவர்கள் காட்டும் சான்றுகள் போலிச் சான்றுகளாய், அவர்களுக்குத் துணைசெய்யவில்லை. மாருகவே காணப்படுகின்றன.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கட்டுக்கதைகள், சரித்திர சம்பந்தம் இல்லாத புனைகதைகள், மிகப் பிற்காலத்தில் இயற்றப் பட்ட நூல்கள்—என்பதை எப்படியாவது நிலைநாட்டவேண்டும் என்பதுதான் பிள்ளையும் சாஸ்திரியாரும் கொண்ட நோக்கம். இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் இவர்கள் தங்கள் ஆராய்ச்சி களை எழுதியிருக்கிருர்கள். ஆராய்ச்சி என்பது, ஏற்கனவே ஒரு கருத்தை எண்ணிக்கொண்டு, அதற்கு ஏற்பச் சான்றுகளைத் தேடுவது அல்ல. சான்றுகள் காட்டுகிற வழியே சென்று அவை காட்டுகிற முடிவைக் காண்பதுதான் ஆராய்ச்சி. சிலப்பதிகாரமும் மணிமேகலை யும் பிற்காலத்து நூல்கள் என்று சான்றுகள் காட்டுமானுல், அதை யாவரும் ஏற்றுக்கொள்வர். ஆனுல், அச்சான்றுகள் உண்மையான உறுதியான நேர்மையான சான்றுகளாக இருக்க வேண்டும்; ஆதாரம் அற்ற போலிச் சான்றுகளும் உண்மைபோல் தோன்றுகிற பொய்ச் சான்றுகளுமாக இருக்கக் கூடாது.

விக்கிரம சோழ விண்ணகரம்.

(புதிய கல்வெட்டுகள்.)

வித்துவான், சி. கோவிந்தராசன்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

மார்கழித் திங்கள் வளர்மதி அட்டமியும் புதன்கிழமையும் பெற்ற இரேவதி நாளில், விக்கிரம சோழ விண்ணகரத்தின் திருமுற்றத்திலே திரிபுவன வீரபுரத்து அரசியலதிகாரிகளும் அறங்கூறுவாரும் பொதுமக்களும் கூட்டம் குறைவறக் கூடியுள்ளனர். ஊர்க்காவலுரிமை பூண்டுவந்த அதிகாரிகளுக்குரிய மகமை முறைமைகள் மாறியதன் காரணமாக எழுந்த குழப்பத்தால், 'வேலியே பயிரை அழித்ததைப்போல்' காவலுரிமை பூண்டவரே ஆத்திரத்தால் அறிவிழந்து ஊரைப் பாழ்செய்ததொடு, திருமால்கோயிலையும் வைணவ மக்களையும் அழிவுசெய்து பழிதீர்த்து விட்டனர். இவ்வாறு நிகழ்ந்த புயலுக்குப்பின் அமைதியைப்போல், அறிஞராலும் ஆற்றலுடையாராலும் கூட்டப்பெற்றதே இவ்வூர்க் கூட்டமாகும். எவ்வாற்றானும், அழிவுகளும் கொடுமைகளும் மீண்டும் நிகழாத வழியினையே அரசியலதிகாரிகள் நோக்குகின்றனர். இந்நிலையில்: கலகம் விளைவித்த காவலதிகாரிகளுள் தலைமைகொண்ட ஒருவன், தங்களுக்குரிய மகமை முறைமைகளைப்பற்றிய முடிபான கருத்தினை அவையோரிடம் தெளிவாகக் கூறியதோடு, தங்களுக்குரிய உரிமைகள் உள்ளவாறு கிடைக்கப்பெறின் 'நாங்கள் எத்தகைய அழிவுகளும் ஊரிற் செய்வதில்லை; அப்படி மீண்டும் செய்யின் எங்கள் தாய்க்கு நாங்கள் மணாளனாகின்ற இழிவைப் பெறுவோ'மென்ற உறுதிமொழியும் கூறுகிறான்.

இவ்வாறான காவலதிகாரிகளின் கருத்திற்குச் சபை ஒப்பம் செய்ததாகத் தெரிகிறது. ஆயினும், அடுத்த திங்களிலேயே அவர் தம் கோட்பாட்டினை மேலும் உறுதி செய்யவேண்டிய நிலைமை திரிபுவனவீரபுர மக்களுக்கு ஏற்படுகிறது. எனவே, தைத்திங்கள் வளர்மதியும் சதுர்த்தசியும் திங்கட்கிழமையும் பெற்ற பூசத்து நாளிலே, விக்கிரம சோழ விண்ணகரத்தின் திருமுற்றத்திலே, மறுமுறையும் ஊர்ச்சபை கூடுவதாயிற்று. இக்கூட்டத்தில் கலகம் விளைவித்த ஊர்க்காவலதிகாரிகள், தங்கள் மகமை உரிமைகளை மேலும் தெளிவுறக் கூறியதுடன், 'இப்படி ஒழிய அடுத்தொரு அன்னியாயம் செய்தோமாகில் எங்கள் பாண்டியராயர் மக்களுக்குச் சேதப்படுத்திய குற்றத்தைச் செய்தவர்களாவோம்' என்றும் உறுதி கூறியுள்ளனர்.

மேற்குறித்த நிகழ்ச்சிகள் கற்பனைக் கதைகளில் வருவன வல்ல. இற்றைக்கு அறுநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்

சோழ நாட்டின் தென்பகுதியில் நிகழ்ந்த உண்மை நிகழ்ச்சி களேயாம். மேற்குறித்த நிகழ்ச்சிகளுக்குரிய நகரத்தை யும், கல்வெட்டுக்களையும், அவை பற்றிய ஆராய்ச்சியினையும் காண்பாம்.

திரிபுவன வீரபுரம் :—

இச்சிற்றூர், பாபநாசம் தாலுகாவின் தென்பகுதியில், தஞ்சையிலிருந்து நாகைக்குச் செல்லும் புகைவண்டிப் பாதையி லுள்ள சாலியமங்கலம் என்னும் ஊருக்குத் தெற்கே ஒரு கல் அளவில் அமைந்துளது. இன்று 'திருபுவனம்' என்னும் பெயருடன் சிற்றூராகக் காட்சியளிக்கும் இவ்வூர் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் ஒரு சிறந்த நகரமாக இருந்திருக்கிறது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகளிற் குறிக்கப்பெற்றுள்ள, வெண்ணிக் கூற்றத்துள் அடங்கிய ஊர்களை நேரிற்கண்டு தெளிவதற்கு யான் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாய், ஆங்காங்கே புதைந்தும் சிதைந் தும் புதரடைந்தும் கிடந்த வரலாற்றுச் சின்னங்களும் புதிய கல்வெட்டுக்களும் எனது அறிவுக்கு விருந்தாயின. அவற்றுள் திரிபுவன வீரபுரமும் ஒன்றாகும்.

இவ்வூருக்கு வடக்கு எல்லையாக வீரசோழ வடவாறும், தெற்கு எல்லையாக பரவை ஏரி என்னும் பகுதியும் அடைவாக அமைந்துள்ளன. இப்பகுதியினுள் எங்கு பார்த்தாலும் சைவ வைணவச் சின்னங்கள் ஆங்காங்கு வரப்பிலும் வாய்க்காலிலும் தரிசிலும் மல்கிக் கிடக்கும் நிலையைக் காணும்போது, சென்ற காலத்திற்குச் சிந்தனையைத் தூண்டுவதாக உளது. இவ்வாறாகச் சிதைந்து கிடக்கும் சிற்பங்களுள், பரவை ஏரி என்னும் பகுதி யின் வடபாலுள்ள பெரியதொரு ஆலின்கீழ் வறிதே நிற்கும் ஐந்தடி உயர அளவில், மிகப்பொலிவுடன், அமர்ந்த பாங்கி லுள்ள திருமால் திருமேனியும், அதனைச் சார்ந்துள்ள திருமகள் திருமேனியும் குறிப்பிடத்தக்கவாம். இத்திருமேனிகள் ஊரினுள்ளிருக்கும் குளமொன்றிற் கிடந்து எடுக்கப்பெற்றன வாகத் தெரிகிறது.

இவ்வூரைப்பற்றிய ஒரு சில இன்பச்சுவை பொதிந்த நாட்டுப் பாடல்களில் 'திரிபுவனம் எண்பது வீதிகளைக்கொண்டது' என்று கூறப்பெறுவதாலும், கல்வெட்டினுள் 'நகரம் திரிபுவன வீரபுரம்' என்று குறிப்பிடப்படுவதாலும், இவ்வூர் பெருநகரமாக இருந்த உண்மை புலனாகின்றது. இவ்வூர் நகரமாக இருந்த காலத்தில் வீரசோழ வடவாற்றின் கரையில் சிவன் கோயிலும், ஊர்நடுவே திருமால் கோயிலும் தெற்கே ஐயன் கோயிலுடன்

பிடாரி கோயிலும் இருந்திருக்கின்றன. இவைகள் இன்று முழுவடிவில் காணக்கிடைக்கவில்லை. சிவன் கோயில் சிதைவுண்ட பின்னர், ஆற்றின் அழிவால் புதைந்து கிடக்கின்றது. திருமால் கோட்டம் இருந்த இடமென்பதற்கறிகுறியாகத் திருச்சுற்று மதிற் சுவரில் சில பகுதிகளும், கருவறையின் அடித்தளமும் எஞ்சி நின்று காட்சி தருகின்றன. இக்கோயிலே மேற்குறித்த கலகத்திற்கு இலக்காகச் சிதைந்த விக்கிரமசோழ விண்ணகரமாகும். இச்சிதைந்த பகுதி பிற்காலத்தில் ஆற்றின் அழிவுக்கும் உள்ளாகியுள்ளதென்பதைச் சூழ்நிலையால் அறியவியலுகின்றது. இவ்விண்ணகரத்தினுள் விளங்கிய திருமாலும் திருமகளும் புதைந்து சீர்கெட்டுக் கிடந்ததைக் கண்ட ஊரார், சில ஆண்டுகட்கு முன்னர் முயன்று, அத்திருமேனிகளை எடுத்து, கோயில் திருமுற்றத்திலேயே கீற்றுக் கொட்டகையிட்டு அமைத்துள்ளனர்.

ஒன்பதடி அளவில் நெடிதாக அரிதுயில் கொண்டுள்ள பெருமாள் திருமேனியும், நான்கடி அளவில், அமர்ந்த பாங்கினுள்ள திருமகள் திருமேனியும் சிற்பத்தாற் சிறந்து உயிர்ப்புடன் விளங்குகின்றன. மற்றும் இச்சிதைந்த கோயிலினுட் கிடந்த நரசிங்கமூர்த்தி, இராமபிரான், பிராட்டியார் ஆகிய தெய்வத் திருமேனிகளுடன், திருமங்கை ஆழ்வார், இராமாநுசர், மற்றுமொரு ஆழ்வார் ஆகிய படிமங்களும் ஒருசேர எடுக்கப்பட்டு மூலவருடனேயே வைக்கப்பட்டுள்ளனர். இவ்வளவாக, மூர்த்திகளும் ஆழ்வார்களும் சிறக்கவிருந்த இவ்விண்ணகரம் இன்று முடிவடைந்த போர்க்களக் காட்சியைப்போல் தோற்றமளிக்கின்றது.

இச்சிதைந்த விண்ணகரத்தில் எஞ்சிய பகுதியாகவுள்ள கருவறையின் அடிப்படை வரிசை மிக்க வேலைப்பாடுடையதாக, பூதபந்த அமைப்பில் கற்களை அடுக்கிவைத்துள்ளதைப்போன்று செறிவின்றிக் கலகலத்தும், இடுக்குகளிலிருந்து முட்செடிகளுடன் புற்றுகள் மல்கியும், வெப்பத்திற்காற்றாது பொரிந்தும் இருக்கின்றது. இக்கருவறைக் கற்களிலேயே மேற்குறித்த கலக நிகழ்ச்சிகளைக் குறிக்கும் கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டுப் பகுதியினுள் பொரிவுகள் மிகுதியாக இருப்பதால், ஒரு சில வரிகள் அழிவுபெற்றுள்ளன. கல்லெழுத்துக்கள் பிற்காலத் தமிழ்க் கல்வெட்டெழுத்துக்களைச் சேர்ந்தவையாகும். இக்கல்வெட்டுகளை யான் படியெடுப்பதற்கு முயன்றபோது, உடன் நின்று புதர், புற்று ஆகியவற்றைக் களைந்து கல்வெட்டுகளைத் தெளிவுபெறச் செய்ததுடன் பல்லாற்றானும் உதவிய தஞ்சை, திரு. T. M. மகாலிங்கம் பிள்ளை, திரு. முத்துக்கிருட்டின நாயுடு

ஆகிய நண்பர்களையும், திரிபுவனம் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. குருமூர்த்தி சாம்பலாண்டியார் அவர்களையும் மறத்தற்கரிது.

1. சிதைந்துள்ள கருவறையின் தென்புறமுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ கொற்சடபன்மர் திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ பராக்ரம பாண்டியதெவற்கு யாண்டு பத்தாவது தநுநாயற்று பூர்வபக்ஷத்து அஷ்டமியும் புதந் கிழமையும் பெற்ற ரெவதிநாள் நகரம் திருபுவனவீரபுரத்து உள்ளவற்கு இவ்வூர்க் காவலுடைய குளமங்கல நாட்டவராம் எங்கள்(கு) இந்நகரத்து இவ்வூர் நடுவிற் திருமுற்றமான...(ஒரு வரியே சிதைந்துள்ளது) இந்தபடி எங்களுக்கு ... காருக்கு ஒரு பணமும் பசானத்துக்கு ஒரு பணமும் வரிசலிலெ | கழித்து பெறக்கடவொமாகவும். கள்ளர் மக்களுக்கு தலைக்கல்லியாணத்துக்கு ஓ ... லை பெறக்கடவொமாகவும், மகண்மை பிள்ளைகட்கும் பெண்ணுக்கும் தலைப ... தண்டக்கடவொமல்லவாகவும் ... ... த்திதைக்கு ஐந்து கலமும் சூ பணமும் அரையர்களுக்கு ஐந் ... ஐஞ்ஞாம்பர்க்கும் ... (ஒரு வரியே இல்லை) பாதகம் பெறக்கடவொமாகவும். குட(க்கு) நாட்டுக்குச் சிறப்புச் செய்வன காத்தனுக்கு ... யித்தபடிகளிலே ... பெறும் து ... பெ .... ப ... டைகளிலும் ... டு ... கடவதல்லவாகவும் | இவ்வூர் பற்றில் விளைநிலம் தெலிங்கன் வயல் முள்ளி வயல் மாதாரத்த நிலங்களுக்கு வச்சி ... களஞ்சேரி எதிர்கொள் யாடயாக விளைந்திட்ட நிலங்களும் வள்ளுக நத்தம் கொல்லை மற்றும் வானவாரி விளைந்த நிலங்களில் தாங்களும் இடையரும் எங்கள் | மகமைப் பிள்ளைகள் அடியார் பயிர் செய்யக் கடவதல்லவாகவும். இவ்வூர் கொயில்களையும் பணிமக்களையும் நலிய...ல்லவாகவும். இவ்வூர் பற்றில் மரங்களை வெட்டச் ... வாகவும். கலக மொத்தாத ... வும். யரமல்ல செ ... ரமாகவும். இப்படி சம்மதித்து கல்லில் வெட் ... .

இப்படி ஒழிய அடுத்தொறு அன்னியாயம் செய்யக்கடவொமல்லவாகவும். இப்படி ஒழிய அழிவு செய்தொமாகில் தந் தாய்க்குத்தான் மிஞளன் உ

2. ஷ வடபுறமுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ கொற்சடபன்மர் திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ பராக்ரம பாண்டிய தெவற்கு யாண்டு பத்தாவது மக்கர நாயிற்று பூர்வ பக்ஷத்து சதுர்த்தெசியும் திங்கள் கிழமையும் பெற்ற புணர்பூசத்து நாள் | நான் இவ்வூரில் எங்கள் பெறுவான முறைமைகளுக்கு உடையார் குலசேகர தெவர்க்கு உபகார்யர் முன்பாக இவ்வூர் நடுவிற்த் திருமுற்றத்து(ள்)ள விக்ரம சோழ,

விண்ணகர் எம்பெருமான் திருக்கா ... ய ... | முதுக்கள் பெற்ற படிகளிலெ பெரும்பாடி காவல் களப்பாடி காவல் காத்து தைச் சிறப்பு நன்மைத்தீமைகள் அவர்கள் பெற்ற படிகளிலெ மனை ... வமதும் உரிமையிலே பெற்றும் நிலத்திற்பெறுமது நிலத்திலெ பெறு(ப)வை முள்ளிவயல் மற்றும் ஊரார்க்கு முந்தவானவா யுள்ள நிலங்களில் பாடிகாவல் பெறுமது மெய்காணுதல் என்ன னுத் ... செய்தல் என அகம்படியாராதல் படி ... யு .... க்கடவொ மல் .... லக்ரகவ ... கை |

3. ஷை மேற்புறமுள்ள கல்வெட்டு

... வற்கு இவ்வூர் காவலுடைய செனைப்பெருமாளான குலொத்துங்க சோழ மூவரையர் ... ல் ... திருக்கொயில் திரு முற்றத்திலுள்ளாரை நலிதல் அரங்கவர் வெட்டுதல் செய்யக் கடவொ மல்லவாகவும் | தங்கள் ஞடு தந்தபடிபடி இவ்வூர் பூதிஷித்த நாள்முதல் காவற்பெற்றுக்கு முற்பிலாண்டுகள் எங்கள் தெவரை நொக்க ஒரு அன்னியாயம் அடுத்தெச் செய்யா மல் காவற் சொற்றப் படாமல் சந்திராதித்தவல் குறியுள்ள மனைக்குத் தறியிலெ( ) இவ்வூர் உள்ளூர் நத்தமனை புன்செய் மாவடை தெலிங்கன் ப...வ... நொக்கக் கடவொமாவமைக்குச் செனைப் பெருமாளான குலொத்துங்க சொழ மூவரையதர் வாசலிலே பெறவுகபடுவொமாக |

இப்படி ஒழிய அடுத்தொறுதரெ அன்னியாயம் செய்தொ மாகில் பாண்டியராயர் மக்களுக்குச் செதப்படுத்தொமாகக் கடவொம்உ.

விளக்கம்

முதலாவதாக, மேற்கண்ட கல்வெட்டுகளில் காணப்படும் விக்கிரம சோழ விண்ணகரத்தைப் பற்றிக் கூறுவாம் :—

பிற்காலச் சோழருள், சோழநாட்டை மிக்க சிறப்புடன் ஆட்சி செய்த முதல் குலோத்துங்கனின் மகன் விக்கிரம சோழ ஞவன். இம்மன்னன் கி. பி. 1118-ல் அரசுரிமை ஏற்று கி. பி. 1136வரை ஆட்சி செய்துளான். இவன் தில்லையில் சிவபெருமா னுக்குத் திருப்பணி பல புரிந்ததோடு, தம் பெயரால் திருவீதியும் அமைத்துளானென்பதை வரலாறுகள் கண்டுள்ளன. மற்றும், இம் மன்னன் தன் பெயரால் திருவரங்கத்தில் இரண்டு திரு வீதிகள் கட்டிவைத்துள்ளான் என்பதை ஸ்ரீ வைணவ கிரந்தங் களாய 'கோயிலொழுகு' போன்ற நூல்கள் கூறுவதால், இவன் வைணவ சமயத்திலும் மிக்க ஈடுபாடுடையவன்' என்று கூறப் பெறும் வரலாற்றுக் குறிப்புகளும் உண்டு. இவற்றைக்கொண்டு ஆராயின், இவன் தந்தை முதற்குலோத்துங்கன் இராசமன்ஞர்

கோயிலில் தன்பெயரால் 'குலோத்துங்க சோழ விண்ணகரம்' என்னும் திருமால் கோட்டத்தினைத் தோற்றுவித்ததைப் போலவே, இவனும் திரிபுவன வீரபுரத்தை நிறுவி, அதில் தன் பெயரால் 'விக்கிரம சோழ விண்ணகரம்' என்னும் திருமால் கோட்டத்தினை எழுப்பியுள்ளான் என்று தெளிய இடமிருக்கிறது. இக்கருத்து வரலாற்றுப்புதுமையுடன் வலியுறுகின்றது. மற்றும், பிற்காலச் சோழர் வழியில் விக்கிரம சோழனென்பான் ஒருவனே ஆட்சியில் இருந்துளான். எனவே கல்வெட்டில் கூறப்பெறும் விக்கிரம சோழ விண்ணகரம், பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழநாட்டை ஆட்சிசெய்த முதற் குலோத்துங்கனின் மகனான விக்கிரமசோழனால் தோற்றுவிக்கப் பட்டதென்று கொள்ளற்குரியதாம்.

இரண்டாவதாக, கல்வெட்டு தோன்றிய காலத்துக்குரிய பாண்டிய மன்னனைப் பற்றிய வரலாற்றினை நோக்குவாம்.

இம் மன்னன், கோச்சடபன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் பராக்கிரம பாண்டிய தேவரென்று கல்வெட்டில் கூறப்பெறுகிறான். இவனுடைய பத்தாவது ஆட்சியாண்டிலேயே கல்வெட்டுச் செய்தியால் அறியப்பெறும் திரிபுவன வீரபுரக் கலகம் நிகழ்ந்திருக்கிறது. இப்பாண்டிய மன்னனுடைய அரசியல் அதிகாரிகளும் வீரர்களுமே சோணாட்டில் ஊன்றி இருந்ததாக அவர்களுடைய உரிமைகளைக் கூறும் பகுதியால் நன்கு விளங்குகின்றது. எனவே, ஒரு சில ஆண்டுகளாவது இப்பாண்டிய மன்னரின் அதிகாரத்தின்கீழ் சோழ நாட்டின் தென்பகுதி இருந்திருக்கிறது. இவ்வாறு பாண்டிய நாட்டவர் சோழ நாட்டெல்லையுள்ளும் ஆட்சி செலுத்திய காலங்கள் பலவற்றை வரலாறுகள் கணித்துள்ளதாயினும், சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் என்பானுக்குச் சோழ நாட்டின் தென்பாகம் அடங்கியிருந்த காலம் புதிதாகவுளது. எனவே, இக்காலத்தையும் பாண்டியனையும் பற்றி ஆய்வுகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

இதுவரை, வரலாறு கண்டுள்ள பாண்டியருள் விக்கிரம சோழனுடைய ஆட்சிக்குப் பிறகு, பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பராக்கிரம பாண்டியனென்பான் ஒருவனைப் பற்றிக் கூறப்பெறுகிறது. இவன் காலத்தில் சோழ நாட்டை இரண்டாம் இராசாதிராசன் ஆண்டுள்ளான். இச் சோழமன்னன் நாட்டைத் திறம்பெற ஆண்டதோடு மேற் குறித்த பாண்டியனோடு மாறுபட்ட அவனுடைய தாயத்தினன் குலசேகர பாண்டியனுக்குப் படை உதவியும் புரிந்துள்ளான்.

இதன் காரணமாகப் பராக்கிரம பாண்டியனுக்கு உதவியாக வந்த சிங்களப் படைகள் பாண்டிய நாட்டிற் செய்த அழிவுகளைச் சோழ நாட்டினர் கேள்வியுற்று அஞ்சினதாகவும் வரலாறு கூறுகின்றது. ஆயினும், இச்சோழ மன்னனுடைய ஆட்சியில் பாண்டியர் சோழ நாட்டில் இடம் பெற்றதாகக் கூறுதற்கு இடனில்லை. மற்றும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் கோயில்களையும் பொதுமக்களையும் எளிமையாக அழிவு செய்கின்ற தாழ்ந்த நிலையில் அரசியல் நடத்திய சோழனோ பாண்டியனோ இருந்ததாக வரலாறுகள் கூறிற்றிலது. எனவே, அரசியலதிகாரிகள் தங்கள் மனப்போக்கிற்கு ஏற்ப அழிவு செய்கின்ற அளவுக்கு ஆட்சி செலுத்திய பாண்டிய மன்னனுடைய காலம் சற்றுப் பிற்பட்டதாகவே இருத்தல் வேண்டும்.

இக்கருத்தை மேற்கொண்டு ஆராயின் கீழ்க்காணும் உண்மைகள் புலனாகின்றன. கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில், அதாவது, கி. பி. 1315-க்குமேல் பாண்டிய நாட்டில் முகம்மதிய வீரனாகிய மாலிக் காபூரின் படையெழுச்சி நிகழ்ந்திருக்கிறது. அதன் காரணமாக பாண்டிய நாட்டின் பெரும்பகுதியில் ஆட்சி குலைந்ததோடு, மற்றைய நாடுகளிலும் குழப்பங்கள் மிகுந்திருந்தன வென்பதை வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு மதவெறியுடன் நாடு பிடிக்கும் முகம்மதியராட்சியால் தமிழகமே சீர்கெட்டுக் கிடப்பதைக் கேள்வியுற்ற, விசயநகர வேந்தனாகிய குமார கம்பண்ணவுடையார் பெரும் படையுடன் தமிழகத்தினுட் புகுந்து, பல போர்க்களங்களிலே முகம்மதியரை வென்று, தமிழக வேந்தர்தம் ஆட்சியைச் செம்மை செய்ய முற்பட்டதாகவும் தெரிகிறது.

இதனால், தமிழகத்தில் நிகழ்ந்த கொடுமைகளை நீக்க, வேற்று நாட்டிலிருந்து வலியுடைய மன்னனொருவன் வரவேண்டிய நிலைமை பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்டிருக்கும் உண்மை புலனாகிறது. எனவே, அக்காலத்தில் சோழ பாண்டிய நாடுகளில் அரசர்கள் பலர் வாழ்ந்திருந்தும், செம்மையான அரசியலை மேற்கொள்ளவியலாமல் இருந்திருக்கின்றனர். இத்தகைய அரசியற் காலத்திற்றான் அதிகாரிகள் தலைக்குத்தலை நாட்டாண்மை பூண்ட நிலைமையும் ஏற்பட்டிருக்கக்கூடும். எனவே, திரிபுவன வீரபுரக் கலகம் போன்ற நிகழ்ச்சிகள் நிகழ, முகம்மதியர் படையெடுப்பால் ஒற்றுமையும் அரசியலும் செம்மை பெறாது குழப்பங்கள் மிகுந்திருந்த மேற்குறித்த காலமே தமிழக வரலாற்றில் இடம் தருகிறது.

எனவே, இத்தகைய காலத்தில் வாழ்ந்தவனாகக் குறிப்பளவில் பாண்டியர் வரலாற்றுள் கூறப்படுபவனும், கி. பி. 1315

முதல், 1347 வரை பாண்டிய நாட்டின் பகுதியை ஆட்சி செய்த வனுமான சடையவர்மன் பராக்கிரம பாண்டியனே கல்வெட்டிற் கூறப்பெறும் பாண்டியனென்று கொள்ள இடனுளது. இவன் சோழ நாட்டின் தென்பகுதியோடு சேர்ந்த பாண்டிய நாட்டின் பகுதியை ஆண்டவனுதல் வேண்டும். இக்கருத்தை மேற் கொள்ளின், விக்கிரம சோழ விண்ணகரக் கலகமும் கல்வெட்டும் எழுந்த காலம் கி. பி. 1325 ஆகும்.

மூன்றுவதாக, திரிபுவன வீரபுரத்தில் உண்டான கலகத் தினைப்பற்றியும் அதற்குரிய அதிகாரிகளைப் பற்றியும் ஆராய்வாம்.

சடையவர்மன் பராக்கிரம பாண்டியனுடைய ஆட்சியிலே, திரிபுவன வீரபுரத்தின் கண்காணிப்பை மேற்கொண்டவராகக் கருதப்படும் உடையார் குலசேகர தேவர்க்குரிய உபகாரியர் முன்பாக, தங்கள் "பெறுவான" முறைமைகளையும் காவலையும் அவரவர் முன்னர் பெற்றிருந்தபடியே மீண்டும் உரிமையுடன் பெறுவதென்னும் கருத்து கல்வெட்டிற் காணப்படுவதால், திரிபுவனவீரபுரம் பாண்டியராட்சியில் இருந்ததென்பது புலனு கிறது. எனவே, திரிபுவன வீரபுரத்தில் களப்பாடி காவல், பெரும்பாடி காவல் போன்ற காவலுரிமைகளைப் பெற்றுவந்த பாண்டியராட்சிக்குரிய குளமங்கல நாட்டவராகிய வீரர்கள் தங்களைப் பொதுமக்கள் மதிப்பதற்குரிய இலச்சினை போன்றதும், சிறு காணிக்கை போன்றதுமாகிய பொருளை 'மகமை' என்னும் பெயரால் பெற்றுவந்திருக்கிறுர்கள். இங்ஙிலையில், திரிபுவன வீரபுரத்தில் வாழ்ந்த மக்கள் புதியவரின் அதிகாரத்தை மதிக்கும் மகமையைக் கொடுக்க ஒருப்படவில்லை. இச்செயலில் ஸ்ரீ வைணவர்கள் பெரும்பாலும் கலந்து கொண்டிருந்திருக்கின்றனர். அதன் காரணமாகவே கலகம் மூண்டுள்ளது. கலகக்காரர் களாகிய காவலதிகாரிகள் குடிமக்களையும், வைணவர்களையும், அவர்கள் கோயிலாகிய விக்கிரம சோழ விண்ணகரத்தையும் அழிவுசெய்து விட்டனரென்பது கல்வெட்டுச் செய்தியால் நன்கு உணரப்படுகிறது.

இவ்வாறு கலகம் விளைவித்த அதிகாரிகள் பராக்கிரம பாண்டியனுக்குரியவரென்பதை, அவர்கள் கூறியதாகக் கூறப் பெறும் கல்வெட்டுப் பகுதியால் நன்கறியலாம். அவர்கள் தங்கள் முறைமைகளைப் பெறுங்கால் 'எங்கள் பெறுவான முறைமை களுக்கு உடையார் குலசேகரதேவர்க்கு உபகார்யர் முன்பாக' என்றும், 'எங்கள் தேவரை நோக்க ஒரு அன்னியாயமும் அடுத்துச் செய்யாமல் காவல் கொள்வோம்' என்றும், 'அடுத் தொரு அன்னியாயம் செய்தோமாகில் பாண்டியராயர்

மக்களுக்குச் சேதப்படுத்தோமாகக் கடவோம்' என்றும் கூறி யுள்ளார்.

சோழ நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் பாண்டியராயர் மக்களுக்குச் சேதப்படுத்திய குற்றமாகத் தமது வாக்குறுதிக்கு எடுத்துக் காட்டியுள்ளவர்கள் பாண்டியனையும் பாண்டிய நாட்டவரையும் பெரிதும் மதிக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. இவ்வாறு உரிமை பேச சோழ நாட்டவர்க்கு இடமின்மையால், கலகக்காரர்களாய ஊர்க்காவல் பாடிகாவல் கொண்ட வீரர்களும் அதிகாரிகளும், பாண்டியனுடைய படைவீரர்களும் அதிகாரிகளும் என்பது தெளிவு. இவர்கள், சேனைப்பெருமாளான குலோத்துங்க சோழ மூவரையர் வாசலில் மகமைகளையும் முறைமைகளையும் பெறுவோமென்று கூறியுள்ளனர். இம் மூவரையர், சோழராட்சியில் சிறந்த படைத்தலைவராக இருந்தவரென்பதை அவருக்குரிய சிறப்புப் பெயரால் நன்கறியலாம். எனவேதான், தங்கள் உரிமைகளையே குறிப்பாகக்கொண்ட கலகக்காரர்கள், சோழநாட்டு மக்களின் அன்புக்குரியவரும், அப்பகுதிக்குத் தலைவருமாயிருந்த அவருக்கு முன்னர் உரிமைகளைப் பெறுகின்ற வழியினைத் தங்கள் நலன்கருதி மேற்கொண்டதாகத் தெரிகிறது.

இக்கட்டுரையில், முதற்குலோத்துங்கனின் மகனான விக்கிரம சோழன் தன் பெயரால் விண்ணகரமொன்று எடுத்துள்ளானென்பதும், கி. பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழ நாட்டின் தென்பகுதி சடையவர்மன் பராக்கிரம பாண்டியனென்பான் அதிகாரத்தின்கீழ் இருந்திருக்கிறதென்பதும், அவன் படைவீரர்களும் அதிகாரிகளும் பிறநாட்டவராகவும் அழிவு செய்வதற்கு அஞ்சாதவராகவும் இருந்திருக்கின்றார்களென்பதும், கல்வெட்டிற் கூறப்பெறும் சேனைப்பெருமாளான குலோத்துங்க சோழ மூவரையர் சோழவதிகாரியே என்பதும், திரிபுவன வீரபுரத்திலுள்ள விக்கிரமசோழ விண்ணகரக் கல்வெட்டுகள் கி. பி. 1325-ஆம் ஆண்டில் எழுந்தவை என்பதும் போதரும்.

இதுவரையில் வெளிவாராததும், புதியதுமான மேற்குறித்த கல்வெட்டுகளைக் கொண்டு, அடிச்சுவட்டைக் கண்டு ஆளை அறிகின்ற பான்மையில் முயற்சித்து விளக்கம் கூறியுள்ளேன். இக் கருத்து வரலாற்றுக்குரிய இயல்பு பெறினும் பெறலாம். ஆயினும் இப்புதிய கல்வெட்டுகளால் சோழருடைய வரலாற்றிலும் பாண்டியருடைய வரலாற்றிலும் புதிய செய்திகள் இணையுறுகின்றன வென்பதுமட்டும் ஒருதலை. எனவே, அறிஞர் இதனை ஆய்ந்து மேற்கொள்ள வேண்டுகிறேன்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

கலைமகள் விழா.

கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் கலைமகள் விழா 9—10—59 வெள்ளிக்கிழமையும், 10—10—59 சனிக்கிழமையும் சிறப்புறக் கொண்டாடப்பெற்றது.

9—10—59: தஞ்சை மாவட்ட மருத்துவத்துறைத் தலைவர் திரு. V. செல்வராசு, M. B., B. S., தலைமையில் நிகழ்ந்தது. தலைவரவர்கள் தாய்மொழி வளர்ச்சியின் இன்றியமையாமை குறித்தும், அதனைப் பேணவேண்டுவது ஒவ்வொரு தமிழனின் தலையாய கடமையென்று வற்புறுத்தியும், வாழ்வுக்கு வேண்டிய கலைகள் பலவற்றிலும் புலவர்கள் பயிற்சி பெறுதலோடு எளிமையாக எல்லா மக்கட்கும் புரியும் வகையில் எடுத்துச் சொல்லவும், எழுதவும் வேண்டுமென்றும் கூறினர்.

சொற்பொழிவாளராக இரு நல்லறிஞர் போந்து விரிவுரையாற்றிச் சிறப்பித்தனர். முதற்கண் உரையாற்றிய வித்துவான் திரு. அ. மா. பரிமணம், M.A. நம் கரந்தைப் புலவர் கல்லூரியிற் பயின்றவர். இவர் வித்துவான் இறுதிநிலைத் தேர்வில் சென்னை மண்டிலத்தில் முதல்வராகத் தேறித் திருப்பனந்தாள் மடத்தாரின் ஆயிரம் வெண்பொற்காசுகள் பரிசைப் பெற்றவர். இவர் "இளங்கோவடிகள் ஏற்றம்" என்ற தலைப்பில் அரியதொரு விரிவுரை யாற்றினர். இவ்விரிவுரை நல்ல திறனாய்வு நெறியிலமைந்திருந்தது.

இவருக்குப்பின் விரிவுரை யாற்றிய வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனார் "இலக்கியமும் வாழ்வும்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர். இவரும் தருமையாதீனக் கல்லூரியிற் பயின்று சென்னை மண்டிலத்தில் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் முதல்வராகத் தேறி ஆயிரம் வெண்பொற்காசுகள் பரிசு பெற்றவர். கம்பர் கவிதைக்கும் ஆங்கிலப் பெரும்புலவர் மில்ட்டன் கவிதைகட்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைச் சிறப்பாக விளக்கி அரியதொரு சொற்பொழிவாற்றினர்.

அடுத்து, சங்கக் கல்விநிலையங்களிலொன்றாய இராதாகிருட்டினத் தொடக்கப்பள்ளி மாணவியர் கரந்தைப் புலவர் கல்லூரிப் புலவர் பாலசுந்தரனார் இயற்றிய புதுவகைச் சந்தமமைந்த இனிய தமிழ்ப் பாக்களைப் பாடி ஆடி மன்றத்தினரை மகிழ்வித்தனர். "வித்தும் விளைவும்" என்னும் நகைச்சுவை நாடகம் சங்கக் கல்வி நிலையங்

களில் மற்றென்றுய உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர்களால் நன்முறையில் நடிக்கப்பெற்றது. இந்நாடகமும் புலவர் பாலசுந்தரனுர் இயற்றித் தந்ததாகும்.

10—10—59: ஓய்வு பெற்ற முன்னுள் திருச்சி மாவட்டத் தலைவர் திரு R. S. மலையப்பன் I. A. S. தலைமையேற்றனர். இவர்கள் தலைமையுரையில் தமிழ்க்கல்வி சிலருக்கு மட்டும் புரியும் வகையில் அமைந்திருக்கக்கூடாதென்றும், எல்லா மக்களும் மொழியின் மேன்மையையும், மொழிப்பொருளையும் உணர்ந்து கொள்ளும் வண்ணம் புலவர்கள் எளிமையாக்க வேண்டும் என்றும் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

சொற்பொழிவாளராக இருவர்போந்து சிறப்பித்தனர். முதற்கண் விரிவுரையாற்றிய கோவை அரசினர் கலைக்கல்லூரி ஆசிரியர் திரு. K. S. மகாதேவன் M. A., B. SC., நம் கரந்தைப் புலவர் கல்லூரியில் சிலகாலம் தலைவராகவிருந்தவர். இவர்கள் முதலில் அறிவியற்கலை தேர்ந்து பிறகு தமிழ்க்கல்வி பயின்றவர். "பழந்தமிழர் காட்சித் திறன்" என்ற தலைப்பின் கீழ் தமிழ்மொழியின் மேன்மையைக் குறிப்பிட்டுத் தமிழ்க் கவிஞர்கள் இயற்கையமைப்பிற் காணப்பெறும் பலவுண்மைகளைத் தங்கள் இலக்கியங்களில் பொதிந்து வைத்துள்ளன ரெனத்தக்க இடங்களைக்காட்டி விளக்கினுர்கள். மேல்நாட்டவர் அரிதின் முயன்று கண்ட பலவுண்மைகளை எளிமையாக நம் பழைய இலக்கியங்கள் கூறுகின்றனவென்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து உரையாற்றிய பெரியகுளம் வித்துவான் திரு. சிவக்கொழுந்து "முத்தமிழ்க்கலை" என்ற தலைப்பில் இனிமையாகப் பேசினுர்கள். தமிழ்ப்பண்களை இசையுடன் பாடும் திறம்பெற்ற இவர்கள் முத்தமிழ்க் கலைச்சிறப்பினை நன்கெடுத்து மொழிந்து மன்றத்தினரை மகிழ்வித்தனர்.

உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி மாணவியர் கலை நிகழ்ச்சி அடுத்துத் தொடங்கியது. தமிழ் பற்றியும், சங்கம் பற்றியும் புலவர் திரு. பாலசுந்தரம் இயற்றிய பாக்களை இனிமை திகழ இசையுடன் பாடி ஆடிக், கும்மி, கோலாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் மூலமாக அவையினரை அகமகிழ்வித்தனர். "தாய்நாடு காத்த வீரன்" என்னும் நாடகம் இராதாகிருட்டினத் தொடக்கப்பள்ளி மாணவர் களால் நடிக்கப்பெற்றது.

இந் நிகழ்ச்சிகளெல்லாம் செவ்வனம் நிகழவும் இவ்விழா பல வகைச் சிறப்புக்களுடன் பொலியவும் சங்க அன்பர்கள், ஆசிரியர், ஆசிரியைகள், மாணவர், மாணவியர்கள் மேற்கொண்ட செயற்றிறம் போற்றற்குரியது.